Reg. M. 2330.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபோ னம்பலவன்
ஞானதரு வாணியையுள் நாடு.

மலர் கஉ	பிரமாதி ஆண்டு கார்த்திகைத் திங்கள் 1939ஹு நவம்பர்மீ	இதழ் கக

ஞானியார் மடத்தின் பொன் விழா

[திரு. வி. கலியாணசுந்தர முதலியார்]

நம் நாட்டில் அறப்பள்ளிகள் பல உண்டு. அவைகளுள் ஒன்று திருக்கோவலூரிலிருப்பது. அஃது ஆதி ஞானியாரால் காணப்பெற்றது. அதன் தொடர்புகொண்ட பள்ளி திருப்பாதிரிப்புலியூரில் திகழ்வது.

இப்பொழுது கோவற் பள்ளித் தலைவராக வீற்றிருப்பவர் ஞானியார் சுவாமிகளென்னும் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள். சுவாமிகள் அப் பள்ளித் தலைமை ஏற்று அரைநூறாண்டாகிறது. ஆகவே பொன்விழா எங்கணும் பொலிவதாக.

ஞானியார் சுவாமிகளை யான் கால்நூறாண்டாக அறிவேன். சுவாமிகள் அடியின்கீழ் நின்று பேசும் பேறும், அவருடன் நெருங்கி உரையாடும் பேறும் எனக்குப் பல

முறை வாய்த்ததுண்டு. அடிகளின் ஆசி பெற்றவருள் சிறியேனும் ஒருவன்.

முருகன் சேவடி வருடி யுருகும் ஈர நெஞ்சும், அவன் புகழ் பேசி இனிக்கும் நன்னாவும், தண்மை பொழியும் செவ்விய நோக்கும், வெண்ணீறு துதையும் நெற்றியும், மாணிக்கக் குழை பிறங்குஞ் செவியும், பொன்னொளிரும் மணிமார்பும், கருமைக்கதிர் விரிக்குந் திருமேனியும், 'சண்முகா - சண்முகா' என்று நீறளிக்கும் நீண்ட கையுங் கொண்ட அடிகளின் திருவோலக்கப் பொலிவு, என்னுள்ளத்தில் ஓவியமெனப் படிந்து நிற்கிறது. அஃது எவர் உள்ளத்தையுங் கவரும்; எவர்க்கும் எளிதில் இன்பூட்டும்.

ஞானியார் சுவாமிகளின் புலமை வியக்கத்தக்கது. அவர் தமிழில் பெரும்புலவர்; வடமொழியில் வல்லவர்; ஆங்கிலமுந் தெரிந்தவர்; காலக்கலையில் பண்பட்டவர்.

பழம்பெரும் புலவர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் தத்தம் நுண்மதியை விளங்கச்செய்து சென்றனர். அப்புலவர் பெருமக்களின் கலைகளெல்லாம் ஞானியார் சுவாமிகளிடத்தில் மருவி நிற்கின்றன. அம்மருவல் இக்காலத் தமிழகத்தின் திருவென்றே கூறுதல் வேண்டும்.

ஞானியார் சுவாமிகள் மாணுக்கருக்குப் பாடஞ் சொல்லும்போதும், சொற்பொழிவு நிகழ்த்தும்போதும் தொல்காப்பியனாகவும், நக்கீரராகவும், திருவள்ளுவராகவும், இளங்கோ அடிகளாகவும், கச்சியப்பராகவும், கம்பராகவும், சேக்கிழாராகவும், வியாசராகவும், நீலகண்டராகவும், சிவஞான முனிவராகவும், பிறராகவும் முறைமுறையே விளங்கி விளங்கி இலக்கிய இலக்கணச் சாத்திர நுட்பங்களை வெளியிடுவதைக் கேட்டுக்கேட்டுப் புலவரானவர் பலர். பழம் புலவர் பலரும் ஞானியார் ஒருவரிடம் விளங்குதல் வியப்பன்றோ?

கோவலடிகளின் பேச்சுத் திறத்தை என்னென்று சொல்வேன்! அதைச் சிறப்பிக்க எனக்குச் சொற்கள் கிடைக்கவில்லை. என் செய்வேன்!

பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாவன்மையிற் சிறந்தவர் இருவர் என்று சொல்லப்பட்டனர். அவர் கிளாட்ஸ்டனும் சுரேந்திரநாதருமாவர். அவ்விருவர்தம் நாவன்மை ஞானியார் நாவன்மையைக் கண்டதில்லை; கேட்டதில்லை; கண்டிருப்பின் - கேட்டிருப்பின் - வணக்கஞ் செய்திருக்கும்.

சுவாமிகள் அறப்பள்ளித் தலைமை ஏலாது, உலகியலில் நுழைந்து, ஆங்கில நாவலராய், உலகை வலம் வந்திருப்பரேல், அவர் கிளாட்ஸ்டனும் சுரேந்திரநாதருஞ் சேர்ந்த ஒருவர் என்று போற்றப்பட்டிருப்பர். கோவறப்பள்ளி, சுவாமிகளைச் சிறைப்படுத்திவிட்டது.

சுவாமிகளின் பேச்சுத்திறனை எதற்கு ஒப்பிடுவது? கடல்மடைத் திறப்புக்கா - வெண்கலக்கோட்டையில் அரசுவாபுகுதலுக்கா - பெரும்புயலுக்கா - ஓயா மழைக்கா? எதற்கு - எதற்கு - ஒப்பிடுவது? பலர் பலவாறு கூறுப.

திருப்பாதிரிப்புலியூரில் வீற்றிருந்து அடியவர்க்கருள் புரியும் கோவலடிகள் கருமை பூத்த ஒரு பொறுமை மலை. அம்மலையினுச்சியில் - மூளையில் - கலைமேகங்கள் பொழிந்த அறிவு மழை நீர், தேங்கித் தேங்கிப் புரண்டு திரண்டு பன்முகங் கொண்டெழுந்து முட்டி முடுகி, வாயின் வழியே முழங்கி விரைந்து இடையீடில்லாச் சொற்றொடர் அருவியாக இழிந்து, பலதிறச் சுவை நுட்பப் பொருட்கள் மிதந்து சுழல, அன்பு வெள்ளப் பெருக்காய்ப் பரவிப் பரந்து, அருள் அலை கொழித்துக் கொழித்து ஓடும். நீர் பருகப் போந்த புலி, கரடி, யானை, மான், பசு முதலியன அருவி முழக்கினெழும் இன்னொலி கேட்டு அதில் ஈடுபட்டுத் தன் தன் பகைமை மறந்து மயங்கி நிற்கும். கரை நீரோடு

வோர் வெள்ளத்திலும் மின்விசையால் பிணிநீங்கப் பெறுவர். ஞானியார் சுவாமிகள் பேச்சால் விளைந்த நலன் அளப்பரிது.

திருப்பாதிரிப்புலியூரில் பலதிற விழாக்கள் நடைபெறும். அவ்விழாக்களில் கலந்துகொள்ளப் போதரும் அடியவர் ‘ ஞானியார் ’ மடத்தில் அமுதுண்பர். அவ்வேளைகளில் அடிகள் சோறிடுந் தொண்டர்களுடன் தாமும் ஒருவராகக் கலந்து அடியவர்க்கு இன்சொலாம் அமுதூட்டுவது நாடறிந்த தொன்று.

சுவாமிகள், தென்னாட்டிலுள்ள பல திருப்பதிகள் சென்று, இறைவனை வழிபட்டு, ஆங்காங்குள்ள மக்கட்கு நல்லுரை பகர்ந்து, தமிழுக்கும் செந்நெறிக்கும் ஆக்கந் தேடியதை அறியாதாரில்லை.

அடிகளிடத்துப் பல நல்லியல்புகள் செறிந்து கிடக்கின்றன. அவைகளுள் குறிக்கத்தக்கன கருத்து வேற்றுமைக்கு மதிப்பளித்தல், அவ்வேற்றுமை காரணமாகப் பிணங்காமை, சமயப் பூசல்களில் மனஞ் செலுத்தாமை, பொது நோக்கு, எவர்க்கும் எளியராந் தன்மை, பொறுமை, இன்னபிற. இவ்வியல்புகளே பெரிதும் அடிகளிடம் என்னை அணுக்கனாக்கின என்று கூறல் மிகையாகாது.

சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள், ஆண்டவன் அருள்வழி நின்று, ஐம்பதாண்டாகத் தம் எண்ணத்தாலும், சொல்லாலும், செயலாலும் தமிழ்நாட்டைப் பலவழியிலும் ஓம்பிய ஒருவர் - ஓர் அறவோர் - ஒரு பெருந்தொண்டர். அவர்தம் அறத்தொண்டு மேலும்மேலும் ஓங்கி வளர்தல்வேண்டும். ஆறுமுகப்பெருமான் அருள் சுரப்பானாக. சுவாமிகளுக்கு எனது வணக்கம்.

ஓர் உண்மை - ஞானி

[எஸ். வையாபுரிப் பிள்ளை]

திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ. சிவசண்முகமெய்ஞ்ஞான தேசிகமூர்த்திகளின் சிறப்பியல்புகளை யெல்லாம் ஒரு சிறு சொற்றொடரால் அடக்கிக் கூறுதல் எளிதன்று. எனினும் அவர்களை ' உண்மை ஞானி ' என்று கூறுவோமாயின், அச்சிறப்பியல்புகளிற் பெரும்பாலனவும் அதன்கண் அடங்கிவிடுமென்றே கருதுகின்றேன். இதனைக் காட்டிலும் வேறொரு தகுதியான தொடரைக் காணுதல் அரிது.

ஞானியார் சுவாமிகளைத் தரிசித்தவுடன் ஒருவனுக்கு முற்படத் தோன்றுவது அவர்களது அன்புடைமையாகும். தம்மிடம் வருபவர் யாவரேயாயினும், அவர்களிடம் தமது முழு அன்பையும் காட்டி அவரவர்களுக்கு வேண்டும் நன்மொழி கூறி, அவர்களையும் தமது கருணை நோக்கினால் பரவசப்படும்படி செய்யுங் காட்சியானது ஒவ்வொருவரும் கண்டு மகிழ்தற்குரியது. காண்போர் மனத்தில் மேலெழுந்தும் அடித்தாழ்ந்தும் நிலையாக உறைந்துவரும் தீக்குணங்களனைத்தும் உருத்தெரியாதபடி மறைந்து விடுகின்றன. சுவாமிகளுடைய அன்பு நம்மை அடிமையாகச் செய்து விடுகின்றது.

' அன்பெனபதொன்றின் தன்மை அமரரும் அறிதல் தேற்றார் ' என்று கம்பர் கூறியிருப்பது எவ்வளவு உண்மையானதென்று சுவாமிகளுடைய சந்நிதியிலே தெளிந்து கொள்ளலாம்.

இனி இரண்டாவதாக நமக்குத் தோற்றுவது சுவாமி கள் மனமொழி மெய்களில் தூயராயிருக்குந் தன்மை. இளம்பருவந் தொட்டே தமது வாழ்க்கையைப் பண்படுத்தி, எவ்வகையான தீய இயல்புகளும் தம்மை அணுகாதபடி பாதுகாத்து, மாசின்றி விளங்குந் திங்கள்போலச் சாந்த மூர்த்தியாய்ச் சுவாமிகள் விளங்குகின்றார்கள். அவர்களைக் காணச் செல்லும்போது சகல மங்கள குணங்களுக்கும் உறைவிடமாகிய இறைவன் இருக்கும் திருக்கோயிலுக்குச் செல்லுவது போன்ற ஓர் உணர்ச்சி நமக்கு உண்டாகின்றது.

மூன்றாவதாக நாம் காணும் சிறப்பியலாவது சுவாமிக ளுடைய பதிஞானமும் பத்தியுமாகும். 'தெய்வமொடு நீயுறையுந் திருக்கோயில்' என்று ஆசிரியர் சுந்தரம் பிள்ளை யவர்கள் கூறுகின்றார்கள். தெய்வத்தோடு உடனுறையுந் தெய்வமெனச் சுவாமிகளைக் கூறினால் அது மிகவும் பொருத்த முடையதாகவே தோன்றும். சாஸ்திர-ஆராய்ச்சி, சாஸ்திர-உபதேசம், சிவபூசை முதலிய சிறந்த செய்கைகளின் மய மாகவே அவர்களுடைய வாழ்க்கை இருந்து வந்திருக்கிறது. பிறரை இழித்துப் பேசுவதும், பிறர் யாது செய்கின்றார்கள் என ஒற்றர் மூலமாய் ஒற்றியுணர்வதும், தம்மையொப் பார் பிறரில்லை யென்னும் தருக்குணர்ச்சியும், தாம் விரும் பாதனவற்றைப் பிறர் செய்வராயின் அவர்களுக்கு நரகங் களைச் சிருட்டிக்கும் குமானுஷ்ய விருப்பமும், பொறாமை யும், தம் பெருமையை நோக்க உலகம் தம்பாற் காட்டும் மதிப்பும் நன்றியறிவும் மிகச் சிறிதென்றெண்ணி அவ்வுல கத்தோடு தீராப்பகை கொண்டிருப்பதும் ஆகியவற்றையே சிறப்பியல்புகளாகக் கொண்டுள்ள 'பெரியோர்கள்' வாழும் நமது நாட்டில், சுவாமிகளைப் போன்ற பெரியோர்கள் ஒரு சிலர் இருப்பது பாலைவனத்திற் பசும்புல்லின் திடர் காணு வது போல்வதாம்.

சுவாமிகளிடத்தில் பரசமய தூஷணை யென்பது இல் பொருளாகும். தாம் மேற்கொண்டுள்ள சாஸ்திரக் கருத்துக்களின் சிறப்புக்களை அவர்கள் கூறி வருவார்களேயன்றி, அந்நிய சாஸ்திரக் கருத்துக்களை யெடுத்து ஆராய்ந்து அவற்றின்கண் குற்றங்களை ஆரோபித்து 'ஸ்வமதஸ்தாபனம்' பண்ணும் இயல்பு அவர்களிடத்து இல்லை. இதனால் அந்நிய சாஸ்திரங்களை அவர்கள் கற்றறியாதவர்களென்று எண்ணுதல் தவறு. அவ்வகைச் சாஸ்திரங்களையும் நன்கு கற்றவர்களே யென்பது அவற்றின்கண் உள்ள நுட்ப விஷயங்களைக் குறித்துச் சுவாமிகளிடத்து விசாரிக்கலுற்றார் நன்கறிவர்.

சுவாமிகளது தெய்வபக்தி போலித்தன்மையுடையதன்று. உலகத்தை வஞ்சித்து, மதிப்புப் பெறல்வேண்டித் தெய்வபக்தியுடையார்போல் நடிக்கும் வேஷதாரிகளை நாம் மிகுதியாகக் காணுகிறோம். இவ்வேஷதாரிகளுள் ஒருவரல்லர் சுவாமிகள். அவர்கள் பக்தி செய்யும் முறையினாலே இது அறியலாகும். பக்தி முறையில் ஆடம்பரம் சிறிதும் கிடையாது. நிறைகுடம் நீர்தளும்பல் உண்டோ? உடல் பொருளாவியை இறைவன்பால் ஒருங்கு சமர்ப்பிக்கும் பக்தி, குறித்த காலத்தில் நியமமாகச் செய்யும் பக்தி: இவ்வரிய தன்மைகளை யுடையதாகும் சுவாமிகளது பக்தி.

இறுதியாக, நாம் கூறவேண்டுவது உலகிலுள்ள வுயிர்களுக்குச் சமயத்தொண்டு புரிவதே உண்மையான பக்தி யென்று சுவாமிகள் கொண்டுள்ளமை. இச்சமயத் தொண்டுக்குப் பயன்படும்படியாகவே, தமது சமயசாஸ்திர ஞானத்தையும், அறிவாற்றல்களையும் பக்குவஞ்செய்து சுவாமிகள் வைத்திருக்கிறார்கள். இத்தொண்டு முக்கியமாகப் பிரசங்க ரூபமாக நிகழ்கின்றது. இவ்வுயர்ந்த தொண்டிலே சுவாமிகள் ஈடுபட்டிருக்கும்போது யாதொரு விதமான உபாதியும் எவ்

வகையினும் அவர்களை அணுக இடங்கொடுப்பதில்லை. அவர்களது பொன்மொழிகளைக்கேட்கும் பேறுபெற்றவர்கள் அறிவு நிரம்பிய தத்துவஞானியாவார்கள் என்பதில் தடையில்லை.

ஈண்டுக்குறித்த அன்புடைமை, தூய வொழுக்கம், பதிஞானம், பக்தி, சமயத்தொண்டு என்ற சிறப்பியல்புகளால் ஞானியார் சுவாமிகள் ஓர் உண்மை ஞானி யென்பது விளங்குகின்றது.

சுவாமிகள் பட்டத்திற்கு வந்து இப்போது ஐம்பது ஆண்டுகள் சென்றுவிட்டன. அவர்களை இன்னும் பல்லாண்டுகள் நம் பொருட்டு உதவவேண்டுமென்று இறைவனை நாம் அனைவரும் பிரார்த்திப்போமாக.

பாவலர் போற்றும் நாவலர் திலகம்

[ம. பாலசுப்பிரமணிய முதலியார்]

ஸ்ரீலஸ்ரீ ஞானியார் சுவாமிகள், திருக்கோவலூர் ஆதீனத்துப் பெருந்தவத்திரு அரசு கட்டிலேறி, ஞானச் செங்கோலோச்சித், தமது சீடப்பெருங்குடி மக்களைச் சிவநெறிக்கண் நிறுத்தி, அவர்கட்கு நல்வாழ்வை அளித்து, ஆறெழுத் தருமொழியாம் சீருடைப் பெருவாளேந்தித், திருநீற்றுக் கவசம் பூண்டு, மாயப்படை வாராமற் காத்துத், தமிழ் மண்டிலமெங்கணும் தாவிப்பரக்கும் பெரும்புகழுடையாராகத் திருப்பாதிரிப்புலியூரில் வீற்றிருப்பது நண்பர்கள் அறிந்ததொன்று. சுவாமிகள் இவ்வாதீனத் தலைமை பூண்ட ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா திருப்பாதிரிப் புலியூரில் 1939ஹு நவம்பர்மீ 18, 19-ம் தேதிகளில் கொண்டாடப்படும். அவ்விழாவிற் கலந்து கொண்டு

நமது சமாஜம் ஒரு வணக்கப்பத்திரம் வாசித்தளிக்கும். அக்காலை நமது சமாஜத்தினர் பெருந்திரளாகக் கூடியிருந்து சுவாமிகளுடைய பொன்மொழிகளைச் செவிமடுத்துச் சுவாமிகள் ஆசீர்வாதத்தைப் பெறவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன். தமிழ் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பேரறிஞர் பலரும் பல கழகப் பிரதிநிதிகளும் வந்து நம்மோடு கலந்து கொள்வார்கள். இவ்விழாவின் நடைமுறை விவரங்களை மற்றோரிடத்திற் காண்க.

இவ்விழாவைக் கொண்டாடும் வகைகள் பலவற்றுள் ஒன்று சுவாமிகளுடைய குணாதிசயங்களைக் காய்தல் உவத்தல் கூட்டல் குறைத்தலின்றி உள்ளவாறே தெரிவித்தல். இம்முறையில் யான் அறிந்தவற்றைச் சுருங்கக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கம். இக்கட்டுரையைக் கண்ணுறும் அன்பர்கள் தத்தம் கருத்துக்களைத் தெரிவித்து நன்றி செலுத்துவார்களென்று நம்புகிறேன்.

1. சுவாமிகள் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் சிறந்த புலமையுடையவர்கள் என்பதை அனைவரும் அறிவர். தமது சொற்பொழிவுகளில் சுவாமிகள் கூறும் அடிப்படையான கொள்கைகட்கு வேதம், சிவாகமம், புராணம், திருமுறை, சித்தாந்த சாத்திரம் முதலியவற்றிலிருந்து தெளிவான ஆதாரங்கள் காட்டுவதை அறிஞர்கள் குறிப்பெடுத்துக் கொள்ளும் காட்சியை நம்மிற்பலர் பலமுறை கண்டிருக்கிறோம். ஏனையோர் தங்கள் உபந்நியாசங்களில் பிரமாணங்களைக் கூறும்போது தங்கட்கு அவற்றின் பொருள் விளங்குவதாகப் புலப்படுத்துவதில்லை; கேட்போரும் பலர் உபந்நியாசங்களில் வடமொழிப் பிரமாணங்களும் பிறவும் கிளிப்பிள்ளை வாக்காகவே உபந்நியாசகர்களால் கூறப்படுகின்றனவோ என்று ஐயுற நேரிடுகிறது. சுவாமிகளுடைய உபந்நியாசங்களில் இவ்வித சந்தேகம்

எஞ்ஞான்றும் எழுந்ததில்லை. பற்பல உபநிடத மேற்கோள்களைப் பதம் பதமாகப் பிரித்துப் பொருள் கூறவதோடமையாது அவற்றிற் கூறப்படும் உண்மைகள் புராணங்களில் எவ்வாறு உபப்பிரமணம் செய்யப்பட்டுள்ளன வென்பதையும் தேவார ஆசிரியர்களும் சந்தான குரவர்களும் அவைகளை எவ்வாறு அழகுபட விவரித்துள்ளார்கள் என்பதையும் சுவாமிகள் விவரிப்பதைக் கேட்கும் அன்பர்கள் "ஈதன்றோ செவிச்செல்வம், இத்தகைய சொற்பொழிவுகளை நமது செவிகள் கேட்கவும் பெறின் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே" என்று தமது நெஞ்சுக்குரைப்பார்கள். சுவாமிகள் வேதசிவாகம புராண வாக்கியங்களை விளக்குங்கால் வேதம்போம் வாயார் அங்காந்த வாயாராகிப் பிரமித்துத் தம்பித்திருக்கும் காட்சியையும் நம்மிற்சிலர் காணும்பேறு பெற்றுளோம்.

2. சுவாமிகள் மிகத்தெளிவாகப் பேசும் பேராற்றலுடையவர்களென்பதை மகளிரும் சிறுரும் கூறுவர். முப்பொருளுண்மை, அத்துவித இலக்கணம் போன்ற கடினமான பொருள்களை விளக்குங்கால் இருப்புக் கடலையை மெல்வது போன்ற துன்பமான முறையை அறவே விடுத்து மிகச்சுலபமான சொற்களால் பல சாதாரண உவமைகளின் துணைகொண்டு எளிய நடையில், பொருளின் நுட்பம், புதைந்த கருத்து, தருக்கமுறை முதலியவற்றைச்சுவாமிகள் விளக்கும்போது இளம்பிள்ளைகளும் பெண்மக்களும் கண் சாம்பாது முகஞ்சுளியாது ஒளிவீசுங்கண்களோடும் மலர்ந்த முகங்களோடும் செவிவாயாகச் சொல்லமிர்தம் பருகுங் காட்சியைக் கண்கள் காண்மின்களோ! வேறு சிலர் உபந்நியாசங்களில் நுவலப்படும்பொருளை அறியமாட்டாது இடர்ப்பட்டுக்கேட்போர் பலர்தம்முள் வேறுபொருள்களைப்பற்றிப் பேசிச் சந்தடிசெய்து கேட்கும்சிலரையும்கேட்க வொட்டாது

தடைசெய்யும் காட்சியைக் கண்காள் காணற்க! "அவையறிந் துரைத்தல்" என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறும் "ஒளியார்முன் ஒள்ளியராதல் வெளியார்முன் வான்சுதை வண்ணங்கொளல்" என்னுங்குறளுக்கு இலக்கியமாயுள்ளவர்கள் சுவாமிகளே யென்பதைக் காண்டல் கருதல் உரையென்னும் மூவகைப் பிரமாணத்துள் காட்சியளவிலேயே அறியக்கூடுமென்பதை வற்புறுத்தவே காட்சிகள் சிலவற்றை ஒன்றன் பின் ஒன்றாகக் கூறினேன்; பின்னும் கூறுவேன்.

3. சுவாமிகள் தமிழில் நிரம்பிய பற்றுடையவர்கள் என்பதை யறியாதார் யாரேவுளர்? திருமுறைகளிலும் கந்தரநுபூதி போன்ற பனுவல்களிலும் சிவஞானச் செல்வர்கள் திருவாக்கிலுமுள்ள சொல்லாழம் பொருளாழம் சொன்னயம் பொருணயம் முதலியவற்றைச் சுவாமிகளைப்போல வேறு யாவரே எடுத்துக் கூறுவர்? ஒரு சொல்லின் முழுப் பொருளையும் முழுநயத்தையுமறிய ஒருநாள் போதாதே! சுவாமிகள் பெரிய புராணத்திற் சில செய்யுள்களையும் கந்தரநுபூதிப் பாக்களையும் பாடமாகக் கூறக்கேட்டோர் தாம் "கற்றது கைம்மண்ணளவு கல்லாதது கடலளவு" என்றல்லது வேறென்ன கூறுவர்? "தம்மினுங்கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றேம் இவர்க்கு நாம் என்று" எனத் தமது மனத்துக் குறைத்தலைத் தவிர சுவாமிகளைக்கண்ட புலவர் வேறென் செயவல்லார்? கண்ணப்பநாயனார் புராணப்பிரசங்கத்தில் நாயனார்க்குத் திண்ணன் என்ற பிள்ளைத் திருநாமம் ஏற்பட்டதை விளக்கித் தமிழ்ப்பற்றை யூட்டும்போது சுவாமிகள் தமிழார்வத்தைக்கண்டு மகிழாதார் யாவர்? 'பேபி' யென்றும் 'ரோஸ்' என்றும் அறியாது பெயரிட்ட தாய் தந்தையர் வெட்கித் தலைகுனிவதைக் காணாதார் யாவர்?

4. சுவாமிகள் நுண்ணிய பொருள்களை விளக்குமிடத்தும் பெரும்பாலும் எளிய உவமைகளைத் துணையாகக் கொள்

ளும் பேராற்றலுடையவர்கள். சிலர் எளிய பொருள்களை விளக்கப் புகுந்தழி சிக்கலான உவமைகளை எடுத்துக்காட்ட முயன்று இடர்ப்படுவர். கண்ட உருவத்தைக் கொண்டு காணாத கடவுளை யறிகிறவன் புத்திசாலியென்று சுவாமிகள் கூறுவதுண்டு. இதற்குவமையாகப் பள்ளிக்கூடத்தில் இரண்டு பிள்ளைகளுள் பழகிய மாணவன் "ட" என்ற எழுத்தைப் பார்த்ததும் "ட" என்ற ஒலியை உச்சரிப்பதையும், பழகாத புதிய மாணவன் ஒருவன் அவ்வொலியை உச்சரிக்கமாட்டாது அவ்வெழுத்தைப் பார்த்து அது ஒரு கோடு என்பதையும் எடுத்துக் காட்டிக் கோடு என்று எண்ணுவது பொய்யல்ல ஆனால் தாழ்ந்த அறிவுநிலை யென்றும் கண்ட எழுத்தைக் கொண்டு கண்ணுக்குப் புலப்படாது காதுக்கே புலப்படும் ஒலியை யறிவதே உயர்ந்த அறிவுநிலை யென்றும், இவ்வாறே திருக்கோயிலிலும் உருவங்களைக் கல் லென்றும் செம்பென்றும் நினைப்பது தாழ்ந்த நிலையென்றும் கடவுளென்று தொழுவது உயர்ந்த நிலையென்றும் சுவாமிகள் மிகத் திறமையாக விளக்குவதைக் கேட்பவர் உள்ளம் கேட்குந்தோறும் பூரிக்கும். மும்மலங்களினுண்மைக்கு "அவன் ஆணவம் பிடித்துத்திரிகிறான்," "அவன் கருமம் அவனை விடுகிறதா," "அவன் மாயையிலே மூழ்கிக் கிடக்கிறான்" என்று தமிழ்நாட்டுக் கிழவிகளும் கூறும் பழக்கத்தைச் சுவாமிகள் சுட்டிக் காட்டுவதை நாம் பன்முறை கேட்டின்புற்றுள்ளோம்.

5. சுவாமிகள் உபந்நியாசங்களில் அவ்வப்போது நகைச் சுவை பொருந்தப் பேசுவதையும் நாம் மறத்தலாகாது. சிலர் நகைச் சுவைக்கென்றே முயன்று வேண்டாத கிளைக்கதைகளை வருவித்துக்கொண்டு வீணாகப் பொழுதுபோகிறதே யென்று அறிஞர்கள் நினைக்கும்படி செய்வதுண்டு. சுவாமிகளுடைய முறை அத்தகையதல்ல. தாழ்ந்த அருவருப்பான பொருள்

களை அறவே விடுத்துக், கற்பூரத்தில் தீப்பற்றுவதுபோல் புத்தி கூர்மை மிக்கவர்கள் சடுதியிற்பற்றி இன்புறக்கூடியவை களாகவே சுவாமிகளுடைய நகைச்சுவைமொழிகள் மிளிரும். இவற்றைக் கோவையாக்கி ஒரு நூல் வெளியிடலாம். தாலிபுலாக நியாயமாக ஈண்டு ஒன்றே கூற விரும்புகிறேன். அஷ்டபுஷ்பங்களுள் ஒன்று பாதிரி. இதில் சிவப்புப்பாதிரி, வெள்ளைப்பாதிரி என இருவகை யுண்டு. சிவப்புப் பாதிரியே பூசைக்குகந்தது; வெள்ளைப்பாதிரி நீக்கப்படுவது. இதைக் குறிக்குமிடத்து "வெள்ளைப்பாதிரி ஒவ்வாதது....வேறொரு பொருளிலும்" என்று சுவாமிகள் கூறியபோது குழுமி யிருந்த கூர்த்தமதியினர் புன்னகை செய்தனர்; ஏனையோர் புன்னகையின் காரணத்தை யறியாது விழித்தனர். வெள் ளைப்பாதிரிப் புஷ்பமும் ஆகாதவஸ்து, நமது சமயத்தைக் குறைகூறி ஏமாற்றித் தாழ்ந்த வகுப்பினர்களைத் தனது சமயத்துக்கு ஈர்த்துச் செல்லும் வெள்ளைப்பாதிரியும் (வெள் ளைக்காரப்பாதிரியார்) ஆகாது என்றுணர்ந்தவரே புன்னகை செய்தவராவார்.

6. இவ்வளவில் சுவாமிகளுடைய உபந்நியாசங்களின் தன்மை முதலியவற்றைச் சுருக்கிக்கொண்டு இனிச் சுவாமி கள் தமது சீடர்களோடும் ஏனைய அன்பர்களோடும் அள வளாவி நடந்து கொள்ளும் முறைகள் சிலவற்றைக் குறிக்க விரும்புகிறேன். முதன்முதலாவதாக நாம் கண்டு வியப் புறக்கூடியது சுவாமிகளுடைய ஞாபகசக்தி. உபநிடதங் களையும் தோத்திர சாத்திரப் பாடல்களையும் ஞாபகம் வைத் திருப்பதே நம்மிற் பலருக்கு அசாத்தியமான காரியம். அவற்றோடு ஒவ்வொருவருடைய வாழ்க்கை நிலை விவரங்களை யும் நினைவிலிருத்தி அவரவரோடு அளவளாவுங்கால் அவற் றைப்பற்றி விசாரிக்கும்போதும் சுவாமிகள் இனிய சொற் களால் மிகுந்த விநயத்தோடும் பரிவோடும் அவரவர்கள்

சுகதுக்கங்களில் தமக்குள்ள ஈடுபாட்டைக் காட்டும்போதும் கேட்போர் மனங்குளிர்ந்து உவகை யெய்துவர். "சுவாமி குழந்தைபோலப் பேசும்" என்று கூறாத கிழவியுமில்லை, குமரியுமில்லை. "சொல்லின் செல்வன்" என்று மேடை மீதேறிப் பிரசங்கம் செய்யும் ஆற்றல் மிக்கவர்களைப் புகழ்வ துண்டு. மேடைமீதிலும், மேடை விட்டிறிந்த பின்னும், மேடை மீதேறும் வரையிலும் எஞ்ஞான்றும் இன்சொற் பகர்ந்து செஞ்சொற்பெருக்கி வன்சொற்கடிந்து பொன்சொல் வழங்கும் சுவாமிகளுக்கே "சொல்லின் செல்வன்" என்ற பட்டம் பொருந்தும்.

7. சுவாமிகள் சாந்தம், பொறை, வெகுளாமை முதலிய நற்குணங்கள் நிறைந்த சத்துவ குணக்குன்றெனக் கூறல் மிகையாகாது. "யாகாவா ராயினு நா காக்க" என்ற முதுமொழியை வாழ்க்கையில் நடத்திக்காட்டும் உயர்வு சுவாமிகட்கேயுரித்து. சுவாமிகளிடம் உபகாரம் பெற்று வாழ்ந்தவர்கள் தங்கள் தீவினைவசப்பட்டு நன்றியை மறந்து மறம் செய்து தவறிழைத்துப் பின்னர் அரச தண்டத்துக் குட்பட்டுச் சரணாகதியென வந்த காலத்து நமது சுவாமிகள் தலைநாளிற்காட்டிய அன்புடனேயே அவர்களை ஏற்று மன்னித்த தெய்வச் செயல்களைப் புலிசைவாசிகளும் வேறு பல நண்பர்களும் நன்கறிவர். குறளர் ஒருவர் "கைதவமறியாச் செய்தவமுடையோய் நினது கடிதங்கண்டாம்" எனத் தொடங்கும் குறும்புக் கடிதமெழுதியதற்கு வெகுளாது அவருடனிருந்து ஒரு மகாநாட்டைத் தலைமை வகித்துச் செம்மையாக நடத்திக் கொடுத்துப் பிறகு பத்தாண்டுகள் கழிந்த பின்னர் அன்னார் ஒரு கழகத்துக்குத் தீங்கிழைப் பதைத் தவிர்க்கவேண்டி இச்செய்தியை வெளியிட்டு அன்னாருடைய உண்மை நிலையைப்பலர் அறியும்படி வெளிப்படுத்தியதைக்கண்டு அன்பரனைவரும் வியப்பெய்தினர். 1927 ஆம்

சென்னையில் சைவசித்தாந்த மகா சமாஜத்தின் விசேட மகா நாடொன்றில் சுவாமிகளின் தலைமையின் கீழ்ச் சொற்பொழிவாற்றிய ஹைகோர்ட்டு ஜட்ஜி ராமேசம் அவர்கள் தமது சொற்பொழிவில் சுவாமிகள் திருவதனத்தில் சாந்தம் நிறைந்த பொலிவு காணப்படுகிறதென்று வாயாரப் புகழ்ந்து கூறியதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

8. சுவாமிகள் இக்காலத்திய உலகப்போக்கை நன்கறிந்து அதற்கேற்பப் பிற மக்களோடு ஒழுகும் பேராற்றலுடையவர்கள். இக்காலத்திய துறவிகளில்இருவகையினரை எளிதிற்காணலாம். பலர் நீறில்லாப்பாழ் நெற்றியராய் நாடோறும் முகக்ஷவரம்செய்த பொலிவுடையராய் உட்சட்டை மேற்சட்டை காற்சட்டை உடற்சட்டை மேற்போர்வை முதலிய ஆடைப்பெருக்குடையராய்ச் சமயப்பற்றை மட்டும்விட்டு ஏனையபற்றுக்களை விடாதவராய்க் காணப்படுகின்றனர்; வேறு சிலர் ஜோசியம் சொல்லுதல், மருந்து தருதல், மந்திரித்தல் முதலிய பல தொழில்கள் செய்து செல்வர்களை யடுத்து அவர்களுடைய பரிவார நிழலில் வாழ்கின்றனர். வேறு பல வகையான ஒழுக்கமுடைய கல்லாடை புனைந்த கள்வர்களுமுண்டு. இவர்களெல்லாம் உலகத்தோடு ஒட்ட ஒழுகுவோராகத் தங்களைக் கூறிக்கொள்வதுண்டு. அறிவு படைத்த உலகம் இவர்கள் ஒழுக்கத்தைத் துரும்பாக மதிக்கும். சுவாமிகள் இத்தகைய துறவிகளை நோக்க வேறொரு பிறவி, வேறோர் உலகத்தவர் என்றே கூறல்வேண்டும். இவ்விருபதாம் நூற்றாண்டில் காலம் தாழ்க்காது காரியங்களைச் செய்யும் கொள்கை வேரூன்றி வருகிறது. நமது சுவாமிகள் குறித்த கால வெல்லைகளைப் பாராட்டி நடக்கும் நவநாகரிகம் நிரம்பப்பெற்றவர்கள். தங்களுடைய சமய ஒழுக்கத்துக்கும் துறவொழுக்கத்துக்கும் இன்றியமையாதனவற்றை சிறு சிறிதும் நெகிழவிடாது ஏனைய வழிகளில் அன்பர்கள் விண்

ணைப்பத்துக் கிணங்கி அவர்களை மகிழ்வித்துத் தாமும் மகிழும் பெருமை வாய்ந்தவர்கள். சில அறிஞர்களைக் கழகங்கள் அழைப்பதென்றால் மிகுந்த பணச்செலவும் உடலூழியமும் வாய்ந்த ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். சுவாமிகள் அவ்வாறின்றி அன்பர்கட்கெளியராக விரும்பிப் போந்து தொண்டாற்றி ஆசீர்வதிப்பதைத் தமிழ்நாடு நன்கறியும். தங்கள் திருமடத்தில் அன்பர்களையும் காணவரும் பேரறிஞர்களையும் ஆரவாரமின்றி உள்ளன்போடு சுவாமிகள் உபசரிப்பதைக் கண்டு இல்லறத்தார் பாடம் கற்றுக் கொள்ளவேண்டும்.

9. சுவாமிகள் தம்மை யடைந்த இளைஞர்கட்குக் கல்வி புகட்டி அவர்களை நல்வழிப்படுத்தித் தகுந்த உத்தியோகங்களில் தக்கார் துணைகொண்டு அவர்களை அமர்த்தி அவர்களுடைய நல்வாழ்க்கையைக் கண்டு இன்புறுவதை நம்மிற் பலரறிவர். சில பெரும்புலவர்கள் தம்மை யடைந்தவரை ஓம்பாது அவர்களைத் தங்கள் சாசுவத அடிமைகளாகப் பாவித்துத் தங்கள் புத்தக வேலை, அச்சு வேலை, ஆராய்ச்சி வேலை முதலியவைகளில் அவர்களைச் சிற்றாள்களாகப் பணிவித்து வேலைக்கேற்ற ஊதியமோ புகழ்ச்சொல்லோ நன்றியோ செலுத்தாத வன்கண்ணராக வெறுக்கப்படுவதையும் நாமறிவோம். சுவாமிகளுடைய உதவியால் கல்வி பெற்றவர்களையும் வேலையி லமர்ந்தவர்களையும் இத்தமிழ் நாட்டின் எல்லாப்பகுதிகளிலும் காணலாகும். மந்திரி முதல் மந்தமதியீறாகவும் லக்ஷாதிபதி முதல் பிக்ஷாதிபதியீறாகவும் உள்ள பல திறப்பட்ட பலதரமுடைய மக்களோடும் பழகி அவர்கள் நன் மதிப்பைப் பெற்றுத் தம்மை யடைந்தவர்கட்கு உபகாரம் செய்யும் வழி அவர்கள் நட்பையும் தமது செல்வாக்கையும் பயன்படுத்திப் புகழ் கொள்ளும்

தமக்கென் வாழாப் பிறர்க்குரியாளராகச் சுவாமிகள் திகழ்கின்றார்கள்.

10. சுவாமிகள் தம்மையடைந்து வேண்டுவார் வேண்டுவதே ஈயும் கொள்கையுடையவர்கள். விரும்பிக் கேட்போர் வசதி ஒன்றையே நோக்கித் தங்கட்கு ஏற்படும் சிரமத்தை ஒரு சிறிதும் பொருட்படுத்தாது கேட்போர் விண்ணப்பத்துக் கிணங்குவ தொன்றையே சுவாமிகளுடைய பெருங் கருணை யறியுமல்லது பிறிதொன்றில்லை. மிருகவைத்திய சாலையிற் பணிபுரியும் நண்பர் ஒருவர் ஒரு சிறு நூலைப் பாடங்கேட்க விரும்பி நண்பகல் பதினெட்டு நாழிகையே தமக்கு வசதியான நேரமென்று தெரிவிக்க, அவருடைய வேண்டுகோளுக்கிரங்கி அவருடைய அறிவு நிலைக்கேற்ற முறையில் அச்சிறு நூலினுள்ள செம்பொருள்கள் அனைத்தையும் பாடமாகச் சொல்லி முடித்து அவர்களைச் சுவாமிகள் ஆசீர்வதித்தார்கள். இவரைப்போல வேறு நூல்களைப் பாடங்கேட்டவர்கள் ஆயிரக் கணக்கிலடங்காதவர்கள். எவ்வித கைம்மாறுமின்றிக் கேட்போர் உயிர் நலமொன்றையே கருதித் தமது உயர்ந்த அறிவுநிலையிலிருந்து பல படிகளிறங்கிக் கேட்போர் நிலைக்கேற்ற சொற்கள், பொருள்கள், முறைகள் முதலியவற்றைக் கருணையோடு கைக்கொண்டு அவர்கட்குப் பாடஞ்சொல்லும் செயல் இறைவனது தடத்த லக்கணத்தை நினைவூட்டுகின்றது.

சுவாமிகளுடைய குணாதிசயங்களைப் புகழ்வதற்கு என் போலியரால் இயலாது. இயன்றவரை சிற்சில கூறினேன். வேறு பல புலவர் பெருமக்கள் விரிவாக எழுதவும் பேசவும் கூடுமாதலின் இம்மட்டில் அமைகின்றேன். பாற்கடல் முழுவதையும் நக்கிக் குடிக்கக் கருதும் பூனையின் ஆசை போன்றதே என்னை எழுதத் தூண்டியது.

தமிழ் நாட்டினரனைவரும் - நமது சமாஜத்தினரனைவரும் - ஏனைய கழகங்களின் உறுப்பினரனைவரும் ஒருங்கே கூடி இக்கட்டுரையின் தொடக்கத்திற் குறித்த நிறைவிழாவிற்கலந்து கொண்டு பாவலர்போற்றும் நாவலர் திலகமாகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிகள் நீடூழி வாழ்ந்து நமக்கு உய்யுநெறி காட்டும் உபதேச மொழிகளை என்ஞான்றும் வழங்குமாறு ஞானபண்டித சுவாமிகளாகிய முருகப் பெருமானது முத்திதரும் திருவடிகளை வாழ்த்தி வணங்குவோமாக. சுபம்.

ஞானியார்

[கே. கோதண்டபாணி பிள்ளை]

இச் சிறுசொற் பெரும்பொருட் பெயர் தாங்கிய அடிகளைத் தமிழ்நாடு நன்குணரும். இவர் இயற்றும் தமிழ்த் தொண்டினைப் போற்றுவோர் பலர். இவர் புலமையைப் புகழும் புலவர் பலர். இவர் நல்லுரை கேட்டு நலமுறுவார் பலர். சொல்வல்லார் என இவரைத் துதிப்போர் பலர். சிறியேனும் இப் பெரியார்பாற் கண்டன சில எழுதலுற்றேன்.

மெய்யன்பர்களே! இச் சிற்றுரையை நீங்கள் உணரத் தொடங்குமுன், உங்களை ஒன்று வினவ விரும்புகின்றேன். இச் சிற்றுரையின் தலைப்பையே வினவாக்கிக் கொள்வீர்களாக. ஞானி யார்? இக்காலத்தே நம் நாட்டில் ஞானம் உடையவர் யார் உளர்? வீடுபயக்கும் உணர்வினை உடையார் அல்லது தருவார் யார் யார் உளர்? அன்பு நெறியிலும் அறிவு நெறியிலும் திளைப்பவர் யாவருளர்?

எங்கெங்குத் தேடினும் அடிகளன்றி வேறு யாருளர் காண்பாம். "சான்ற கொள்கைச் சாயா யாக்கை, ஆன்றடங் கறிஞர்", அடிகளன்றி யாருளர்? தேர்ந்து அறிந்து தெரிவிப்பீராக.

ஞானியார் பெருமான் என்பார் யாவர், எத்தகையர், என நேரே காணுமாறு நெடுநாள் அவாவி ஒருநாட் கண்டேன். காட்சியளவில் இவர்தம் வடிவும் அழகும் மனத்தைக் கவர்வன. சிறிதே சிவந்து நிமிர்ந்த உருவம். துவராடை உடுத்த துகள்தீர் மேனி. பருமையும் மெலிவுமின்றிப் பாங்குற அமைந்த உடல். விரிந்த கொள்கையின் பரந்த நெற்றி. ஆழ்ந்த நோக்குடன் அன்பொழுகு கண்கள். நேர்நிமிர்ந்து முனை வளையா கூர் அறிவு காட்டும் கூர்மூக்கு. தமிழ்ப் புலமை பூக்கும் தனிவாய். தெய்வ ஒளிவீசும் திருமுகம். இவர் முகத் தோற்றத்தை உற்றுநோக்குக. அதில் தோற்றுவது யாது? சங்கத்தமிழின் திங்களிப்போ? சிந்தை சேர்ந்த சிவத் தொளியோ? அன்பு பழுத்த அகத்தெளிவோ? அறிவு பழுத்து அமை வளமோ! தமிழின் பழுத்த தனியழகோ! யாதெனப் புகல்வது! இவையாவுந் திரண்டெழுந்த "ஞானத்தின் திருஉருவோ" நம் எதிரே தோன்றுவது? கண்டன யாவையும் வாரி வாரி உண்டன கண்கள்; கொண்டன களிப்பு.

இங்கிலையிலும், ஓர் ஐயம் நிகழ்ந்தது. ஐய நிகழ்ச்சி அறிவிற்கியல்போ? அல்லால் கல்வியின் குறைவோ? அஃது யாதாயினும் ஆகுக. எழுத உரிய வடிவும் அழகும், இயற்கையிற் பெற்ற இவர் காதில் அசைந்தது குண்டலம். கழுத்திற்றவழ்ந்தது கண்டிகைத் தாவடம். இவர் புதுமையை அறவே நீக்கிப் பழமையிற் பழுத்த பழையர் போலும். இவர்பால் புதியன புகுந்தார் போற்

றும் உரையும் செயலும் காண்பது எங்ஙனம் என ஐயுற்றேன். ஐயந்தெளியுமாறு தேடி நின்றேன். சிறிது பொழுதில் இப்பெருமான் ஒரு சொற்பொழிவாற்றுவர் எனக் கூறினர் சிலர். அடிகளின் சொல்லுரை கேட்டுத் துணிதலே நலம் எனத் துணிந்திருந்தேன்.

சொல் மழை தொடங்கிற்று. முதுநீர் நிலையிற் புதுநீர் சேர்ந்ததும் புரண்டெழுந்தது வெள்ளம். அன்பு நெறியை அளாவிற்று. அறிவு நெறியுட் புக்கது. அலைகள் சுமந்தன அறிவும் செறிவும். கலையின் நிறைவு, நுரையின் மிதந்தது. சுவையும் கனிவும் சுழித்தெழுந்தன. வெள்ளத்துள் ஆழ்ந்தேன். யாண்டொளித்ததோ என் ஐயம்? என்னை மறந்தேன்; மிதந்தேன். இறுதியில் தன் நினைவு சிறிது முளைத்தது. என்னுடனிருந்தார் எண்ணிலார் என்னுயிருரென உற்று நோக்கினேன். என்னினும் மிதந்தனர் ஏனையோர். என்னே சொல் வன்மை! என்னே சொல் வளம்! தூற்ற வந்தோரும் தொழுது நின்றனர்.

என்ன புண்ணியஞ் செய்தனர் இவரிடம் கற்கும் இளஞ்சிறார்! ஒரு நாள் இச்சிறுவர்களைச் சோதிக்கநேர்ந்தது. என்னே இவர்தம் கல்வியின் தெளிவும், தேர்ச்சியும். "மாணவர் மாற்றம் காட்டும் மருவிய ஆசான் மாட்சி". அடிகள், வெருளாது, விரையாது, ஐயந்தீர, அறிவுக்கேற்ப, உள்ளத் தூன்ற, உரைத்து, உரைத்து, பால் மணம் மாறாப்பாலர் தமையும் பாவலராக்கினர். இந்நல்லாசிரியர் சொல் நல்லுரை கேட்கின், புல்லும் புகலும் இலக்கணம், கல்லும் சொல்லும் கவி. இப்பேராசிரியர்பாற் கற்றபின் மற்றொருவர் வாய் கேட்க நூலுளதோ? மனமுளதோ?

நாட்டின் நலத்தால் நல்லோர் தோன்றுவர் என்பர். அடிகளின் நாடெது? அதன் நலம் யாது? அவர் நாடு நடு நாடென்ப. "நடு நாடு" என்பது ஏனைய நாட்டின் இடை

யுள நாடு என்பர். இப்பொருள் சிறந்த தொன்றன்று. 'நடு' எனும் சொல் ஈண்டு வினைத்தொகை. சைவத்தையும், தமிழையும் நட்ட (நிலை நாட்டிய) நாடு. அடிகள் இவற்றை இன்று நடுகின்ற நாடு, இனி நடும் நாடுமாம். அன்பு நெறியிற் சென்றார் இருவர், (அப்பர், சுந்தரர்) இங்குத் தோன்றினர். அறிவு நெறியிற் சென்றார் இருவர், (மெய்க்கண்டார், அருள்நந்தி சிவாச்சாரியார்.) இங்கு உதித்தனர். அந்நால்வரும் ஒருவராகி ஞானியார் பெயரே பூண்டு நலந்தர இங்குத் தோன்றியுள்ளார். அந்நால்வரிற் பின்னுள இருவர் அடிகள் பெயரினும் புகுந்தனர். அடிகள் பெயரினைச் சிறிது கருதுவீர்களாக. "மெய்ஞ்ஞான சிவாச்சாரியார்". அடிகளுக்கும், அன்பு நெறியினும் அறிவு நெறியில் அவா அதிகம்போலும்.

அன்று ஓர் அம்மை (திலகவதியார்) கெடிலக்கரையில் அழுது அழுது தந்தார் நம் ஆளுடையரசை. இன்று அவ்வாற்றின் எதிர்கரை நின்று நந்தமிழன்னையும் தவம் பல செய்து தந்தனள் ஒரு தனி இளங் குழவியை. இது தவ வேடம் பூண்டு தனியரசு செய்யக் காண்மின்.

ஐயன்மீர்! எளியேன் கூறியன புனைந்துரை எனச் சிறிதும் ஐயற்க. ஐயம் உளதெனின், நேரிற் செல்க; அடிகளைக் காண்க; கேட்க; உண்மையை உணர்க. அடிகளின் பொன்விழா அண்மைத்து. அடிகளைக் காணுதல் அரிதன்று. காணுதற்குரிய காலம், இடம் ஆதிய வரையறையில. யாவராயினும் கற்போர் உளரேல், கேட்போர் உளரேல் அடிகள் கண்துயிலும் கொள்ளார். அவருடன் பலநாட் பழகுதல் வேண்டாவாம். அடிகளை ஒருகாற் காணின் ஒருகாற் கேட்கின் "அன்ப ராகுநரன்றி மன்பதையுலகில் மற்றைய ரிலரே."

தக்ஷிணாமூர்த்தி

[மயிலைகிழார்]

ஒவ்வொரு சிவாலயத்திலும் தக்ஷிணாமூர்த்தி என்ற தென்முகக் கடவுளின் திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. திருஇரும்பூளை எனப்பெயரிய ஆலங்குடி என்ற தலத்தில் மட்டும் இம்மூர்த்தி சிலாரூபமாக இருப்பதோடு செப்புத் திருமேனியாகவும் திருத்தேருக் கெழுந்தருளித் தேரூர்ந்து காட்சியளிக்கிறார். ஆயிரம் யாண்டுகட்குமுன் முதல் ராஜ ராஜ சோழன் கட்டி முடித்த தஞ்சையிராஜராஜேச்சரத்தில் அவ்வரசன் எழுந்தருளச் செய்த செப்புத் திருமேனிகள் பலவற்றுள் தக்ஷிணாமூர்த்தியின் திருவுருவம் பற்றிய விவரங்கள் அவ்வாலயத்துச் சுவரில் சிலாசாசனமாக வரையப் பெற்றுள்ளன. அவற்றைக் கண்ணுறும் அறிஞர்கள் அக் காலத்தில் தக்ஷிணாமூர்த்தியின் திருவுருவம் எவ்வாறு யாக்கப்பட்ட தென்பதை எளிதில் அறியலாம். இக்காலத்திற் பல கோயில்களிற் காணப்படும் தென்முகக் கடவுளர் திருவுருவங்களைச் செவ்வையாகத் தரிசித்து ஒப்பிட்டு அவ்வுருவங்களின் பழமை முதலியவற்றை யறியலாம்.

S. I. I. Vol. II Part II—No. 50
On a pillar of the north enclosure in the Rajarajesvara Temple, Tanjore.

தென்னிந்திய கல்வெட்டுக்கள்
2-ம் தொகுதி 50-ம் எண்ணுள்ளது

ஸ்வஸ்தி ஸ்ரீ உடையார் ஸ்ரீராஜராஜதேவர் உடையார் ஸ்ரீராஜராஜீஸ்வரம் உடையார் கோயிலில் யாண்டு இருபத்

தொன்பதாவது வரை எழுந்தருளுவித்த செப்புத் திருமேனிகள் உடையார் கோயிலில், முழத்தால் அளந்து கல்லில் வெட்டின ||—(௧) ஆஸநமாக எழுந்தருளி இருந்த பர்வதத்துக்கு மேல் கேசாந்தத்தளவுஞ் செல்லப் பதின் எண் விரல் உசரத்து நாலு ஸ்ரீஹஸ்தம் உடையராகக் கனமாக எழுந்தருளுவித்த தக்ஷிணாமூர்த்திகள் திருமேனி ஒருவர் ||—(௨) இவரே எழுந்தருளியிருந்த பர்வதத்தில் அடியில் ஒரு முழமே பதிற்றுவிரல் நீளத்து ஒரு முழமே நால்விரல் அகலத்துப் பன்னிருவிரல் உசரத்துபர்வதம் ஒன்று ||—(௩) இதன் மேல் பன்னிருவிரல் உசரத்து ஒன்பதிற்று விரல் நீளத்து எண்விரல் அகலத்து பர்வத சிகரம் இரண்டு ||—(௪) இந்த சிகரங்களோடுங்கூடச் செய்த பாதாதிகேசாந்தம் நால்விரல் உசரத்து இரண்டு கை உடையராகக் கனமாகச் செய்த கிந்நரர் இருவர் ||—(௫) பாதாதிகேசாந்தம் மூவிரலை உசரத்து இரண்டு கை உடையராகக் கனமாகச் செய்த கிந்நரிகள் இருவர் ||—(௬) தேவர் ஸ்ரீபாதத்தின் கீழ்க்கிடந்த பாதாதிகேசாந்தம் பதிற்றுவிரல் நீளத்து இரண்டு கையுடையராகக் கனமாகச் செய்த முசலகன் ஒன்று |—(௭) இருந்த ஆஸநத்துக்குமேல் கேசாந்தத்தளவுஞ் செல்ல பன்னிருவிரல் உசரத்து இரண்டு கை உடையராகக் கனமாகச் செய்த ருஷிகள் இருவர் |—(௮) இருந்த ஆஸநத்துக்குமேல் கேசாந்தத்தளவுஞ் செல்ல எண்விரல் உசரத்து இரண்டு கை உடையராகக் கனமாகச் செய்தருஷிகள் இருவர் |—(௯) புச்சாதிபணாந்தம் அறுவிரல் உசரத்துக் கனமாகச் செய்த பாம்பு ஒன்று ||—(௰) இருந்த ஆஸநத்துக்குமேல் கேசாந்தத்தளவுஞ் செல்ல மூவிரல் உசரத்து இரண்டு கையுடையராகக் கனமாகச் செய்த *கர்ணப்ராவ்

---

*Karnapravrita is the same as Karnapravarana (a being whose ears are so large that it uses them as a cloak)

ருதர்கள் இருவர்|—(௰௧) பர்வதத்திற் கிடந்த புச்சாதிசிகாந்தம் ஐவிரலளை நீளத்துக்கனமாகச் செய்த புலி ஒன்று|—(௰௨) பர்வதத்துக்குமேல் அக்ரத்தளவுஞ் செல்ல ஒரு முழமே எண்விரலளா நீளத்து *அறுவிரலே ஆறு தோரைச் சுற்றும் உடையதில் வேறுகச் செய்து கைத்த மஹாசாகை ஒன்பதும் இவற்றுள் அனுசாகை நாற்பத்திரண்டும் உடைத்தாகக் கனமாகச் செய்த ஆல வ்ருக்ஷம் ஒன்று||—(௰௩) மூவிரலே நாலுதோரை நீளத்து ஒரு விரலே இரண்டு தோரை அகலத்து நாலுதோரை கனத்து செய்து தூக்கின பொக்கணம் ஒன்று||—(௰௪) அறுவிரலே ஆறுதோரை நீளத்து ஒரு விரலைச்சுற்றிற் கனமாகச் செய்த கையும் இதனெடுங்கூட ஐவிரல் நீளத்து மூவிரற் சுற்றிற் செய்த கைத்தழை ஒன்றும்||—(௰௫).

“கொற்று அட்டி ஆளார்”

[ஈ. ந. தணிகாசல முதலியார்]

மேற்கண்ட சித்தாந்தக் கட்டுரை ஐப்பசித் திங்கள் 453-ம் பக்கத்தில் காணப்படும். இதில் திருவாளர் - ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கள் வன்றொண்டர் பாடிய திரு ஓணகாந்தன் தளித்திருப்பதிகச் செய்யுட்களி

---

*சிற்ப சாத்திரத்தின்படி ஒரு முழம் ௨௪ விரல் கொண்டது; ஒரு விரல் எட்டு தோரை கொண்டது; ஒரு முழமென்பது இக்காலத்திய 33 அங்குல நீளமுள்ளதாகும். பாதாதிகேசாந்தம் = அடிமுதல் முடி நுனிவரை. புச்சாதிபணாந்தம் = வால்நுனி முதல் படத்தின் நுனிவரை. புச்சாதிசிகாந்தம் = வால்நுனி முதல் தலைநுனி வரை. கைத்தழை = பீலி.

லொன்றிலுள்ள "தேவியார் கோல்தட்டியாளார்" என்னும் பாடம் சரியோ, அல்லது "கொற்றட்டியாளார்", என்னும் பாடத்திற்குப் பிழையாய்க் கொள்ளப்பட்டதோ, என்னும் ஆராய்ச்சியை எழுப்பியுள்ளார். தமது கொள்கைக்கு ஆதரவாய்ப் பின்வரும் ஏதுக்களையும் காட்டுகின்றனர். அவையாவன :—

(1) ஓலைப் பிரதிகளில் "கொற்று", என்பதற்கும் "கோற்று", எனபதற்கும் வித்தியாசம் தெரியாது.

(2) "கோற்றட்டியாளார்" என்பதைக் கோல் தட்டி ஆளார் என்று பதப் பிரிவினைசெய்து வீணைக் கோலால் (ஜலதரங்கம் வாசிப்பதுபோல்) தட்டி, அல்லது வீணைக் கோலைத் தட்டி, அதாவது அம்மையார் வீணை வாசித்துக் கவனத்தை யதிற்செலுத்துவதால் தம்மை யாளமாட்டார் என்று சுந்தரமூர்த்தி நாயனார் கூறுவதாக மேற்கூறிய பதிப்பாசிரியர்கள் கொள்ளுகின்றனர். கோல் தட்டல் கோலாட்டம் எனவும், வளையலை ஒலித்தல் எனவும், கொள் வாருமுளர்", [இவை பொருத்தமன்றென்பது] என்று வரைந்துள்ளார்.

(3) சில கல்வெட்டுகளில் "கொற்றட்டுக" எனவும் "கொற்று" என்பதற்கு உணவென்னும் பொருள் என்பது.

(4) ஆகையால் "தேவியார் அடியேற்கு உணவை யளித்து, அடியேனை ஆளமாட்டார்" எனக் கொள்வது அப்பாட்டுக்கும், "அற்றபோழ்தும்", "வல்லதெல்லாம்" என்னும் செய்யுட்களின் உணவைக் காட்டும் கருத்திற்கும் பொருத்தமிருப்பதால், "கோல் தட்டி யாளார்" என்னும் பாடத்தைக் "கொற்றட்டி யாளா"ராகக் கொள்ளலாகாதா என்றும், அவர் முடிவை நிலைநிறுத்தியும், ஆயினும் ஆராய்ச்சிக்கு விடப்பட்டதாகவும் வரைந்திருக்கின்றனர். ஆதலால் அவர் எழுப்பிய வினவுக்கு விடை பகர்தல் தேவாரத்

தொண்டு செய்வோர் கடமையாதலால் யானும் இவ்விடம் சிறிது விண்ணப்பஞ்செய்கின்றேன்.

(1) ஓலைப்பிரதிகளின் "கொ" என்பதற்கும் "கோ" என்பதற்கும் பேதங்காணப்படுகின்றது. ஓலைச்சட்டம் எழுதும் முதல் பாடத்தில் "கோம்பு சுழிகோணாமல்" என்னும் வெண்பா எழுதிப் பழகுவது கிராமப் பள்ளிக்கூடங்களில் இன்னும் வழக்கம் உண்டென்பது நம்புகிறேன். ஆதலால் நெடிலுக்குரிய கொம்பு ஓலைகளிலும் உண்டு. ஒற்றைக் காட்டப்புள்ளியே மெய்யெழுத்துக்களுக்கு வைப்பதில்லை.

(2) "கோல் தட்டல்" என்பது வீணைக் கோலைச் சலதரங்கம் போல் தட்டுவதென்னும் பொருள் எப்புலவர் கொண்டாரென்பது ஆச்சரியம் விளைவிக்கின்றது. வீணையைத் தட்டுவதில்லை; "தடவுவது", என்னும் பதப்பிரயோகமே கண்டிருக்கின்றோம். மற்றும் பார்வதிதேவியார் வீணைவாசித்ததாக எந்நூலிலும் காணப்படவில்லை. அவர் பந்தாடல் பாடப்பட்டிருப்பினும், கோலாட்டமும் ஆடியது எங்கும் பாடப்படவில்லை. அன்ன பூரணி வடிவான தேவியார், கோல் தட்டியாளாமையால் (மேற்கண்ட பொருளின் வண்ணம்) அன்னம் அளிக்கவில்லை யென்பதும் சற்றும் பொருந்தாது. அவ்வாறே* வளையல் ஒலித்த தென்னும் பொருளுமாம்.

(3) "கொற்று" என்பது "உணவு" என்பது கல்வெட்டுகளிலும் உலகவழக்கத்திலும் காணப்படினும், அவற்றிற்கும், மேற்கண்ட தேவாரத்தொடர் மொழிக்கும் யாதொரு சம்பந்தமும் காணப்படவில்லை.

(4) நமது தேகத்தில் இரத்தம் தசைக்கு மூலாதாரமாயுள்ள தேவியார் (பிரிங்கிரிஷியின் கதையைக் கவனிக்க.) உணவை நமக்களியார் என்னும் கருத்துள்ள தொடர்மொழி நம்பியாரூரர் பாடினர் என்பது விபரீதமாக தேவியாரைக் குற்றஞ் சாட்டுவதாகும். ஆயினும் அச்செய்யுள் நிந்தா

* கோல்வளை என்னும் சொற்றொடருண்டு. அது இருபெயரொட்டுப் பண்பாய் யாரும் கொண்டதில்லை.

ஸ்துதியே. அதன் வேடிக்கையான மேலே காணப்படும் பொருள் "கணபதி வயிறுதாரி, *அங்கை வேலோன் குமரன்" இவ்வாறாகத் தேவியார் கோலை (அதாவது பிரம்பை) தட்டி அவர்களை அடக்கமாட்டார்; இரண்டும் செல்வப் பிள்ளைகளாய் அம்மையார் வைத்துக் கொண்டிருக்கிறார்; ஆதலால் உங்களுக்கு ஆள்செய்ய மாட்டாம் ஓணகாந்தன் தளியிலுள்ள பெருமானே! என்பது. தேவியார் வழிபாட்டில் பொற்கட்டுகளமைந்த பிரம்பைப் பக்கத்தில் வைத்து பூசை செய்யும் வழக்கம் உள்ளதால் "கோல் தட்டியாளார்" என்ற தொடர்மொழி ஒருவகை நிந்தாஸ்துதியாக நம்பியாரூரர் பாடினார் போலும்! அறிஞர் மற்றும் ஆராய்க.

திருவாசக உரை

திருச்சதகத்தெழுபத்தோராவதுசெய்யுள்

[சிதம்பர சுவாமிகள்]

(எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்)

புணர்ப்ப தொக்க எந்தை யென்னை யாண்டு பூண நோக்கினாய்,
புணர்ப்ப தன்றி தென்றபோது நின்னொ டென்னொ டென்னிதாம்,
புணர்ப்ப தாக அன்றி தாக அன்பு நின்க ழற்கணே,
புணர்ப்ப தாக அங்க ணாள புங்க மான போகமே.

(இ - ள்) புணர்ப்ப தொக்க-என்பது-ஆண்டவனோடு மாறுகொண்டு திரிகின்ற அடிமையானவனை, அந்த ஆண்டவன் சதுர்வித வுபாயங்களிலுந் தன்னடிமை யென்று தன்னோடுங் கூட்டிக்கொள்வதொப்ப,

எந்தை யென்னை யாண்டு பூண நோக்கினாய் எ-து. திருவடிக்கருகராகிய மெய்யடியார் குணங்களொன்று மில்லாதவ

* கையில் சிறுபிள்ளைகளுக்கு வேலிருந்தால், அது ஆபத்தை விளைவிக்காதா? என்னும் பொருள் போலும்!

ணைய்க் காமம், வெகுளி, மயக்கங்களினாற் பிரபஞ்சத்தை மெய்யென்று சுழல்கின்ற என்னைக் கிருபையினாலே ஆசாரிய மூர்த்தமா யெழுந்தருளிவந்து தடுத்தாட்கொண்டு மெய்யடி யார்கண் மேல்வைக்குங் கிருபா நோக்கத்தை அடியேன் போதத்துக் குள்ளும் புறம்புமா யழுந்தவைத் தருளிச் செய்தாய்.

புணர்ப்பதன்றி தென்றபோது எ-து. அரிப்பிரமாதிகட் குங் கிடையாத இந்தக் கிருபாநோக்க மொன்றுக்கும் பற்றாத எனக்குக் கிடைப்ப தன்றென்று கிருபையருமை யறிந்த போது.

நின்னொ டென்னொ டென்னிதாம் எ-து. என்னதாகி யிருந்த சகசமலமொன்றும் நின்னோடு மென்னை யிரண்டற்ற அத்துவிதமாய்க் கூட்டுவதாகவும்.

அன்றிதாக அன்புநின் கழற்கணே புணர்ப்பதாக எ-து. முன்யானெனதாய் நின்ற பிரபஞ்சமானவிஃ திப்போ தியா னெனதன்றாகவும், இப் பிரபஞ்சத்தின் மேனின்ற அன்பு சுவாமிகள் திருவடிக்கண்ணே மீளாது நிற்பதாகவுமாயின.

அங்கணாள புங்கமான போகமே எ - து. அழகிய கண் ணாளா. அரிப்பிரமாதி போகங்களையுங் கடந்திருப்பதான சிவானந்த போகமே. இந்தக்காருண்ணியத்துக்கு நாயேனாற் கைம்மாறு முண்டு கொலோ - எ - று.

“ஆண்டுபூண நோக்கினா” யென்றமையான், புணர்ப்ப தொக்க வென்ற வுவமைக் காண்டவ னடிமை வருவிக்கப்பட் டது. பூணநோக்குதல், போதம் பதையாது வைத்த நோக் கம், கிருபையருமை யறிந்தபோது தற்செயன் முழுது மிறந்து சிவத்தோ டத்துவித மானபடியினாலே “நின்னோடு மென்னைப் புணர்ப்பதாக” வென்றார். என்னோடு மென்னு மூன்றனுருபை யென்னை யென்னு மிரண்ட னுருபாகக் கொள்க. உம்மைகளு மாயினவென்னு மாக்கமுந் தொக்கி நின்றன.

முற்றிற்று

ஸ்ரீ குமாரதேவன் திருவடி வாழ்க.

மலைக் கோயில்கள்

[C. M. இராமசந்திர செட்டியார்]

குறிஞ்சி நிலத்திற்கு முருகக்கடவுளும் முல்லை நிலத்திற்கு மாயோனும் தெய்வங்களாகப் பண்டைத் தமிழர் கொண்டிருந்தார்கள். ஆகவே, மலைகளின்மீது எழுந்தருளியிருந்த தெய்வம் எங்கும் முருகக்கடவுளாகவே விளங்கியிருந்தது. ஆனால் நாள் செல்லச் செல்ல முல்லை நிலத்து மாயோனுக்கும் சில மலைகள் உரிமையாகிவிடத் தொடங்கின. வடவேங்கடம் பழமுதிர்சோலை என்பன திருப்பதியும் திருமாலிருஞ் சோலையும் ஆகிவிட்டன என்பர். இக்கூற்றுக்குக் காரணம் கூறின் பெரும் விவாதத்திற்கிடமாகும். ஆகவே அதை நிறுத்திக்கொள்வோம். இக்காலத்திலோ, மலைகளில் பெரும்பான்மை முருகக்கடவுளுக்கும் சிறுபான்மை திருமாலுக்கும் இருப்பிடங்களாக அமைந்திருக்கின்றன. ஆனல், சிவபெருமானுக்கோ பண்டைத் தமிழர் வகுத்த ஐந்துவகை நிலங்களில் எதுவும் சொல்லப்படவில்லை. ஆகவே, அவருக்கு உரிமையாக ஒரு நிலமில்லையோ எனக் கேட்கலாம். சிவபெருமான் முழுமுதற்கடவுள் ஆகையால் ஒரு நிலத்திற்கென்று அவர் பங்கு எடுத்துக்கொள்ளவேண்டியதில்லை. எல்லா நிலங்களையும் தமக்கு உரிமையாக்கிக் கொண்டு எல்லா நிலங்களிலும் இருப்பார் அன்றோ? உதாரணமாக, குறிஞ்சி நிலத்திற்கு இணையற்ற கயிலையையும், மருதத்திற்கு ஒப்பற்ற இடைமருதையும், முல்லைநிலத்திற்கு ஏற்ற முல்லைவாயிலையும், நெய்தலுக்குத் தகுந்த புகார் நகர்ப் பல்லவனீச்சரத்தையும், பாலைக்கு ஒரு கழிப்பாலையும் இருப்பிடங்களாகக் கொண்டனர் அன்றோ? ஆகவே அவருக்கு ஒரு நிலம்தான் உரிமை உண்டு எனக் கொள்ளவேண்டாம்.

இனி, அவர் எங்கும் இருக்கும் தன்மை விளக்குவதற்காகத் தன் திருக்குமார் எழுந்தருளிய குறிஞ்சி நிலத்தையும் ஆக்கிரமித்தார் என்பதை இக்கட்டுரையில் எடுத்துக் காட்டுவோம். தான் வீற்றிருக்கும் இடங்களில் எல்லாம் தன் திருக்குமரனும் இருப்பான். அதனல் குற்றம் இல்லை என்று எடுத்துக் காட்டுவதற்காகவும் மலைகளில் ஏறி அவர்

குன்றியிருக்கலாம். மனிதன் எண்ணப் போக்கு எவ்வாறு செல்லுகிறது பாருங்கள்!

சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பாடல்பெற்ற தலங்கள் பெரும்பான்மை மருதமும்முல்லையுமே. குறிஞ்சி நிலம் உலகில் மிகக் குறைவானதினால் அத்தலங்களும் குறைவே. அதிலும் தென்னாட்டில் குறிஞ்சி மிகக் குறைவன்றோ! இனிச் சிவபெருமான் வீற்றிருக்கும் குறிஞ்சிப் பான்மை பெற்ற கோயில்களைக் கூறுவாம்.

I. சோழநாடு காவிரிக்கு வடக்கு

திருவீங்கோய்மலை :—குழித்தலைக்கு வடக்கே முசிரியிலிருந்து மேற்கு 3 கல். சுவாமி மரகதாசலர் - அம்மன் - மரகதவல்லி. ஈ பூசித்தது. மலைமேல் கோயில்; காவிரியோரம். நெடுக படிகள் உண்டு.

II. ஷை நாடு, காவிரிக்குத் தென்கரை

1. வாட்போக்கி :—இரத்தினகிரி என்பர். குழித்தலைத் தெற்கே 6 மைல் - சுவாமி இரத்தினகிரிநாதர் அம்மன் சுரும்பார் குழலியம்மை. வாளைப்போக்கி இரத்தினம் கொடுத்தது. படிகள் உண்டு. பகலில் மலை ஏறுவது சிரமம்.

2. கற்குடி :—இதற்கு உய்யக் கொண்டான் திருமலை என்று இப்போது பெயர். திருச்சி ஜங்ஷனிலிருந்து வடமேற்கு 1½ மைல். சுவாமி - உச்சிநாதர், கற்பகநாதர் - தேவி - அஞ்சனாக்ஷி. சிறுமலை - ஏறுவது சுலபம்.

3. திரிச்சிராப்பள்ளி :—கோட்டை ஸ்டேஷனிலிருந்து ½ மைல். சுவாமி - தாயுமானவர் - அம்மன் - மட்டுவார் குழலியம்மை. திரிசிரன் பூசித்தது. அன்புடைய பெண்ணுக்குத் தாய் போல் வந்து மருத்துவம் செய்தது. சிறுமலை - அடியிலிருந்து மண்டபங்கள் வழியே ஏறலாம். படிகள் உண்டு. மலைசுற்றிலும் ஊர்.

4. திருவெறும்பியூர் :—திருவெறும்பூர் ஸ்டேஷன். சுவாமி - எறும்பீசர் - அம்மன் - நறுங்குழல் நாயகி, எறும்பு பூசித்தது - சிறுமலை.

III ஈழ்நாடு (இலங்கை)

திருக்கோணமலை :—இலங்கையில் கீழ்க்கரையில் உள்ளது. சுவாமி கோணேசர் - அம்மை - மாதுமையாள். இப்போது ஆலயம் இல்லை. கடலில் மூழ்கிவிட்ட தென்பர். சுவாமிப்பாறை என்ற பாறைக்குத்தான் பூசை. அது கடலின் மேல் செங்குத்தாய் நிற்கிறது. கோட்டை அதைச் சுற்றிக் கட்டப்பெற்றுள்ளது. வெள்ளிக்கிழமை மாத்திரம் செல்லலாம்.

IV பாண்டி நாடு

1. திருப்பரங்குன்றம் :—மதுரைக்குத் தென்மேற்கு ஸ்டேஷன், சுவாமி - பரங்கிரிநாதர், தேவி - ஆவுடையநாயகி. இது முருகக்கடவுள் படைவீடும் ஆகும். மலை பெரியதாக இருந்தும் ஆலயம் அடியில்தான் உண்டு. மலை சுற்றலாம்.

2. திருக்கோடுங்குன்றம் :—பிரான்மலை என்பர். திருப்பத்தூரில் இருந்து வடமேற்கே 20 மைல். அம்மையநாயக்கனூரிலிருந்து வடகிழக்கே 16மைல். மூன்றுகோயில்கள் உண்டு - அடியில் உக்கிரீசர் - அமிர்தேசுவரி. மத்தியில் விசுவேசுரர் - விசாலாட்சி. உயரத்தில் - மங்கைபாகர்-குயிலின் மொழியாள். இவையெல்லாம் மலைச்சரிவிலேயே உள்ளன. இவைகளுக்கு மேலே மலை வெகுஉயரம் செல்லுகிறது. ஏறுவது கடினம்.

V கொங்கு நாடு

1. திருச்செங்கோடு :—சங்ககிரிக்குத் தெற்கு ௭ மைல். சுவாமி - அர்த்தனரீசர் - அம்மன் அர்த்த நாரீசுவரி - ஒரே உருவம். மேற்குமுகம். மலை ஒருவாறு உயரம். படி உண்டு. ஆலயத்திலேயே செங்கோட்டு வேலர் - கிழக்குமுகம். உச்சியில் வரடிப்பாறை - ஊரில் சிவாலயம் உண்டு.

VI நடு நாடு

1. அறையணி நல்லூர் :—திருக்கோயிலூர் ஸ்டேஷன். ½ மைல். சுவாமி - அறையணிநாதர் - தேவி அருணையகி.

மேற்கு முகம். பெண்ணை நதி அருகு. மலை - ஒரு பெரும் பாறைதான். ஏறுவது வெகு சுலபம்.

2. திருவண்ணாமலை :—ஒரு ஸ்டேஷன். சுவாமி - அருணாசலேசர் - அம்மன், உண்ணாமுலையம்மை. மலை பெரிய மலை ஆனால் கோயில் அடிவாரத்தில் சமதிலத்தில்; ஆலயம் மிகப் பெரிது. கிரி சுற்றலாம் 7 மைல்.

VII தொண்டை நாடு

1. திருக்கழுக்குன்றம்:—செங்கல்பட்டிலிருந்து 9 மைல். சுவாமி - வேதகிரீசர். அம்மன் பெண்ணினல்லாள். கழுகு பூசித்தது. மலை உயரம். ஆலயம் உச்சியில். அடிவாரத்தில் ஆலயம் ருத்திரகோடீசர். கிரி சுற்றலாம்.

2. திருக்காளத்தி :—ஸ்டேஷன் 2 மைல். சுவாமி - காளத்தி நாதர். அம்மன் - ஞானப்பூங்கோதை. அடியில் - ஆலயம். பொன்முகலி ஆற்றோரம். மலைமீது - குடுமித்தேவர். கண்ணப்பர் பூசித்தது. மலை சிறியது.

VIII வடநாடு

1. திருப்பருப்பதம் :—இதனை ஸ்ரீசைலம் என வழங்குவர். கர்னூல் ஜில்லாவில் நந்தியாலிலிருந்து 60 மைல். மலைமேல் 30 மைல் ஏறவேண்டும். வெகுகடினம். சுவாமி - மல்லிகார்ச்சுனர். அம்மன் - பிரஹுராம்பாள்.

2. இந்திரநீலப் பருப்பதம் :—சுவாமி - நீலாசல நாதர். தேவி - நீலாம்பிகை. இமயமலைப் பாங்கர்.

திருக்கேதாரம் :—இமய மலையில் அரித்துவாரத்திலிருந்து 200 மைல் நடந்து மலை ஏறவேண்டும். வெகு கடினம். சுவாமி - கேதாரநாதர். தேவி - கேதாரகௌரி.

4. திருநொடித்தான் மலை :—கயிலைமலை. திபேத்தில் உள்ளது. பாதை - வெகுகடினம். சுவாமி - பரமசிவம். அம்மன் பார்வதிதேவி. கிரி சுற்ற 4 நாள் பிடிக்கும். அருகில் மானசரோவரம் என்ற ஏரி உண்டு.

தனி வல்லபமும் ஜீவனும்

[திரு. சி. கதிர்வேலு முதலியார் எழுதியது]

(உரிமையுள்ளது)

அறிவதற்கு முடியாத மிகவும் நுட்பமாய் அண்ட முழுமையும் ஒரு பெரிய தனி வல்லபம் அசைந்துகொண்டிருக்கிறது. இப்படி மிகவும் நுட்பமாய் அசையும் அசைவினாலே அண்டத்திலுள்ள அணுக்கள் அவைகளின் குணங்களுக்கு ஏற்றபடி அசைந்துகொண் டிருக்கின்றன. உலகத்தில் உண்டாகின்ற விஞ்ஞான சாஸ்திரங்கள் எல்லாம் மேற்சொன்ன அண்டத்தில் அசைகின்ற அசைவிலிருந்து உற்பவிக்கின்றன. அண்ட முழுமையும் ஒரு பெரிய தனி வல்லபம் அசையாவிடின், விஞ்ஞான முறைகள் உண்டாக்க முடியாது. அந்தத் தனிவல்லபம் இடைவிடாமல் சதா அசைந்துகொண்டிருக்கிறதினால், அநேகவிதமான விஞ்ஞான முறைகள் காணப்படுகின்றன. இந்த அண்ட முழுமையும், ஒலி, ஒளி, அசைவு, தாதுக்கள், மூலங்கள், ஜீவன்கள் ஆகிய இவைகளெல்லாம் ஏராளமாகக் குவிந்து இருக்கின்றன.

ஒரு விஞ்ஞான முறை ஏற்படுத்துகிறபோது, அண்ட வெளியில் எல்லாப் பொருள்களும் அடங்கி யிருப்பதினால், அந்த விஞ்ஞான முறைக்கு ஏற்றபடி ஸ்தூல வஸ்துக்கள் அமைக்கப்படும். அந்த ஸ்தூல வஸ்துக்களின் முறைக்குத் தக்கவாறாக அண்டத்தில் அமைந்துள்ள பொருள்களிலிருந்து, அமைக்கப்பட்ட ஸ்தூல வஸ்துக்கள் அவைகளுக்கு வேண்டிய பொருளை இழுக்கின்றன.

அமைக்கப்படுகிற ஸ்தூல வஸ்துக்களில் யாதொரு விஞ்ஞானப் பொருள்களு மிருக்கவில்லை. ஆனால் அண்ட

வெளியில் குவிந்துள்ள பொருள்களை ஸ்தூல வஸ்துக்கள் ஒன்றோடு ஒன்றாய்ச் சேரும்படி அமைத்தால், அந்த ஸ்தூல வஸ்துக்களின் சேர்க்கை அமைப்பால் அண்ட வெளியில் குவிந்திருக்கிற பொருள்களை இழுத்து, வேண்டிய காரியங் களுக்கு உபயோகப்படும்படி தருகிறது.

அண்ட வெளியில் சுழன்றுகொண் டிருக்கிற ஒரு தனி வல்லபத்திற்கு அதிகமான அசைவு இல்லாததினாலும், அந் தத் தனி வல்லபம் தனது சக்தியை உலக காரியங்களில் செலுத்த முடியாததாலும், இந்த ஸ்தூல வஸ்துக்களின் அமைப்புகள் அதிகமான அசைவுகளைப் பெற்றிருப்பதினால் இவை, அண்ட வெளியிலுள்ள பொருள்களையெல்லாம் விஞ் ஞான மார்க்கத்தினால் இழுத்துக் காரியங்களுக்குக் கொடுக் கின்றன. அதிகமாயும் லேசாயும் இருக்கிற அண்ட வெளியி லுள்ள பொருள்களை விஞ்ஞான மார்க்கத்தினால் இழுத்துக் காரியங்களைச் செய்வதற்கு உபயோகப்படுத்தும்படி இவ் விஞ்ஞானக் கருவிகள் அமைக்கப் படுகின்றனவே யொழிய அந்த ஸ்தூலக் கருவிகளிலிருந்து பொருள்களை எடுப்பதற்கு விஞ்ஞானக் கருவிகள் அமைக்கப் படுகிறதில்லை என்று அறி யவும். அது எப்படியென்றால் ஆகாயத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிற சூரியனை நாம் நேராக நமது கண்களினால் பார்க்கமுடியாது. ஆனால் ஒரு கண்ணாடியில் புகை பிடித்து, சூரியனை அக்கண்ணாடியின் வழியாகப் பார்ப்போமானால் அந்தச் சூரியனுடைய உருவத்தை நமது கண் கூசாமல் நன்றாகப் பார்க்கலாம். இதில் சூரியன் 1, புகை அமைந்த கண்ணாடி 1. இந்த கண்ணாடியின் மூலமாய்ச் சூரியனைப் பார்க் கிறோமேயன்றி கண்ணாடியில் சூரியனைப் பார்க்கிறதில்லை.

சூரியனை நாம் பார்க்கும்போது நமது கண்கள் கூசு கின்றன. புகைபிடித்த கண்ணாடியின் மூலமாய்ச் சூரியனைப் பார்த்தால் கண் கூசுகிறதில்லை. இதன் காரணம் என்ன?

சாதாரணமாய் நாம் சூரியனைப் பார்க்கும்போது ஒரு தனி வல்லபம் மிகவும் மெதுவாகச் சுழன்று கொண்டிருப்பதினால் அந்தச் சுழலின் மூலமாய்ப் பார்க்கிறோம். அப்படிப் பார்க்குமிடத்துச் சூரியனுக்கு அதிக ஒளி இருக்கிறதினால் இந்த அண்டவெளியில் சுழலுகின்ற சுழல் அந்தச் சூரிய ஒளியைத் தடுக்க முடியாததால் நமது கண்கள் கூசுகின்றன. புகை அமைந்த கண்ணாடியின் மூலமாய்ச் சூரியனைப் பார்க்கும்போது புகை அமைந்த கண்ணாடி அண்டவெளியில் சுழலுகின்ற சுழலைத் தடுக்கிறதினால் நாம் நமது கண்கள் கூசாமல் சூரியனைப் பார்க்கிறோம். சூரியனுடைய ஒளியைக் காண்பதற்கு அண்டவெளியில் சுழலுகின்ற சுழலையும், சூரியனுடைய ஒளியைத் தடுப்பதற்காக புகைஅமைந்த கண்ணாடியையும் உபயோகப் படுத்துகிறோம். இந்தப் புகை அமைந்த கண்ணாடிக்கு விஞ்ஞானகருவி யென்று பெயர். ஒரு குளத்தின் மத்தியில் ஒரு பெரிய கல்லை எறிந்தால் அந்தக் குளத்தின் மத்தியிலிருந்து கல் விழுந்த வேகத்தினால் ஜலம் எழும்பிக் கொஞ்ச தூரத்திற்கு அப்பால் போய்விழுகிறது. ஜலத்தைத் தட்டி எழுப்புவதற்கு உதவியாயிருக்கிற இந்தக்கல்லையும், விஞ்ஞான கருவியென்று சொல்லலாம். மேற் சொன்ன சூரியனுக்கும் புகை அமைந்த கண்ணாடிக்கும் பொருத்த மிருப்பதுபோல, கல்லுக்கும் ஜலத்திற்கும் ஒரு பொருத்தம் உண்டென்று அறிய வேண்டும். இதைப் போலவே மனிதனும் அண்டப் பெரு வெளியில் ஒரே தன்மையாய்ப் பேதமின்றி விளங்குகின்ற தனிப் பொருளை அறிவதற்குத் தேகம் வேண்டும். அது எப்படி யென்றால் குளத்தில் உள்ள ஜலத்தை எழுப்புவதற்குக் கையின் மூலமாய் ஒரு அசைவைக் கல்லினிடத்தில் தாக்கி எறிந்து ஜலத்தை எழுப்புவதைப்போல, மனது என்னும் அசைவைத் தேகத்தின் மூலமாய்த் தாக்கி அண்டப் பெரு வெளி

யில் வீசும் போது அந்த அண்டப் பெருவெளியில் உள்ள சுடரானது பொங்கி வெளிக்கிளம்பும். ஆகையினால் மெய்ஞ் ஞானப் பொருளை அறிவதற்குத் தேகம் வேண்டும்.

சூரியனைப் புகை அமைந்த கண்ணாடியின் மூலமாய்ப் பார்க்கும்போது கண்ணாடியையும் உலகத்தையும் மறந்து சூரியனை மாத்திரம் மனம் பார்க்கிறது. முதலில் புகை அமைந்த கண்ணாடியை உபயோகித்துச் சூரியனைப் பார்க்கும் போது கண்ணாடியைக் கவனியாததுபோல, ஒரு யோகி தனது மனதால் அண்ட வெளியில் ஆன்மப் பிரகாசத்தைப் பார்க்கும்போது தனது தேகத்தையும் உலகத்தையும் மறந்து நிற்கிறார்.

சூரியனுடைய கிரணங்களைத் தடுப்பதற்குக் கண்ணாடியில் புகையை அமைப்பது போல உலகத்திலுள்ள மாய்கையைத் தடுப்பதற்கு மனதில் அசைவற்ற நிலையை அமைக்க வேண்டும். உலகத்தையும் புகை அமைந்த கண்ணாடியையும் மறந்து சூரியனைப் பார்ப்பதுபோல உலகத்தையும் தேகத்தையும் மறந்து ஆன்ம ஒளியைப் பார்க்கவேண்டும்.

விளக்கம் :—கல்லாகிய மனதை அண்ட வெளியென்னும் சமுத்திரத்தில் நிலைபெற்ற சக்தியினால் வீசினால் சமுத்திரமென்னும் அண்டப் பெருவெளியிலிருந்து ஜலமாகிய அமிர்தம் ததும்பும். இதற்கு ஞானதீர்த்த ஸ்நானமென்று சொல்லப்படும்.

எல்லா விஞ்ஞான சாஸ்திரங்களும், ரசாயன சாஸ்திரங்களும், வான சாஸ்திரங்களும் அண்டப்பெரு வெளியில் சுழன்று கொண்டிருக்கிற ஒரு தனிப் பெரிய வல்லபத்தியிருந்து உண்டாகின்றனவென்று உறுதியாக அறியவேண்டும். அண்டப் பெருவெளியில் அசைந்துகொண் டிருக்கிற அணுக்களை எந்த விஷயத்திற்கு எந்தப் பொருள் வேண்டுமோ அந்த விஷயத்திற்கு அந்தக் கருவிகளை அமைத்துப்

பெருவெளியிலுள்ள அணுக்களைப் பெரிய அசைவின் மூல மாய் விஞ்ஞான கருவிகளின் சகாயத்தினால் விஷயங்களுக் குத் தக்கவாறாக எடுத்து உபயோகிக்கப்படுகின்றன.

ஒரு சக்கரத்தை அதிக வேகமாய்ச்சுழற்றினால் அந்தச் சக்கரத்தின் உருவத்தை நாம் பார்க்க முடியவில்லை. ஏனென் றால் சுற்றும்போது அந்தச் சக்கரமானது சுழலின் சகாயத் தினால் அணுக்களாக மறைகின்றன. இதனால் இந்தச் சக்கர மாகிய உருவமும் சக்கரத்தின் பொருளும் கடைசியாக அண் டப் பெருவெளியில் அணுக்களாக மறைந்து விடுமென்ப தைக் காட்டுகிறது. இந்த உதாரணத்தினால் உலகத்தி லுள்ள நாமரூபப் பொருள்களெல்லாம் அதனதன் சக்திக்கு ஏற்றவாறாக முடிவில் அணுக்களாக மாறி, அந்தப் பெருவெளி யில் பரவிவிடும் என்று தெரிய வருகிறது.

சூரியனிடத்தில் ஏழு வர்ணங்களிருக்கின்றன. அந்த ஏழு வர்ணங்களை இந்த அண்ட வெளியில் பார்க்க முடிய வில்லை. ஏனென்றால் பூமியானது சுற்றும் போது அசைவு உண்டாகி அந்த அசைவினாலே அந்த ஏழுவர்ணங்களும் அணுக்களாகப் பிரிந்து நிற்கிறதினால் நாம் அவைகளைக் காண முடியவில்லை. அந்த ஏழுவர்ணங்களும் அண்டப் பெரு வெளியில் மறைந்து அணுக்களாக நிற்கின்றன. இதைப் போலவே ஒருவன் தனது மனதை நன்றாக அண்டப் பர வெளியில் சுழலும்படி செய்தால் நாமரூபப் பிரபஞ்சங்கள் அந்தச்சுழலில் மறைந்து அணுக்களாகப் பிரிந்து காணப் படும். இப்படி மனதை நிறுத்துகிறவன் எவனோ அவ னுக்கு ஆன்மப்பிரகாசம் அல்லது ஒளி நன்றாகக் காணப் படும். அந்த யோகிக்கு மாயையினால் துன்பம் உண்டாகிற தில்லை.

(i) அநேக விதங்களான வர்ணக் கண்ணாடிகளினால் அமைத்த ஒரு விளக்கின் மத்தியில் ஒரு மெழுகு வத்தியை

ஒளிரவைத்தால், அந்த ஒரே சுடரானது அநேக விதங்களாக அமைந்த கண்ணாடியின் மூலமாய்ப் பிரதிபிம்பித்து அநேகவித வர்ணங்களாகத் தோன்றுகிறது.

(ii) அதே மெழுகுவத்தியை, ஒரே விதமான வெண்மைக் கண்ணாடியினால் அமைத்த விளக்கின் மத்தியில் ஒளிரவைத்தால் அந்தச் சுடரானது பேதமின்றி ஒரே வர்ணமாகத் தோன்றும். இதைப்போலவே அநேக விதங்களான நாமரூபப் பிரபஞ்சங்களில் நமது மனது பஞ்ச இந்திரியங்களின் வழியாய்ச் சலிக்கிறபோது அநேக விதங்களாயுள்ள துக்க விருத்திகள் உண்டாகின்றன. அன்றியும், நமது மனதை நாமரூபங்களாகிய பிரபஞ்சத்தில் பஞ்சேந்திரியங்களின் வழியாய்ப் புக விடாமல் உலகபேதங்களையும் இந்திரிய விஷயங்களையும் நீக்கி ஒரே தன்மையாயும் அகண்டமாய்ப் பரவினதாயும் சுழலுகிறதாயுமுள்ள சித் வெளியில் நிறுத்தினால், மனோசலனம் நீங்கிச் சித் வெளியில் கலந்து அறிவுமயமாகிய ஆனந்தம் உண்டாகும்.

மனிதன் தேகத்திற்குள்ளிருக்கும் பரம ஆன்மாவிற்குச் சலனம், பேதம், துக்கம் ஆகிய இவைகள் கிடையா. ஆனால் அதிலிருந்து ஜீவசக்தி சலித்துப் பஞ்சேந்திரியங்களின் வழியாய்ப் புகுந்து உலகத்திலுள்ள நாமரூப பேதாபேதங்களில் அழுந்தி வீணைகத் துக்கப்படுகிறது. ஆகையினாலே ஜீவன் பஞ்சேந்திரியங்களின் வழியாய்ப் புகுந்து பேதாபேதங்களை உணர்ந்து துக்கப்படுகிறதே ஒழிய பரம ஆன்மாவுக்கு மேற்சொன்ன துக்கங்கள் இல்லாமையால், ஜீவனை அத் துக்கங்களிலிருந்து நீக்க வேண்டுமென்று சொல்ல ஏற்பட்டது. இதுதான் மஹாவாக்கியத்தின் பொருளாகும். மஹாவாக்கிய மென்பது தத் + துவம் + அஸி = தத்துவமஸி என்ற பொருளாகும். தத் என்பது அகண்டாகார சின்மய வெளி; துவம் என்பது ஜீவன், அதா

வது பஞ்சேந்திரியங்களின் வழியாய்ச் சென்று மாயையில் அழுந்துவது; அசி யென்பது சித்சொரூப வெளியில் ஜீவனைச் சேர்ப்பது. அது எப்படி யென்றால் நாம ரூபப் பிரபஞ்சம் நீங்கி நின்றபோது அவற்றிற்கு மேலாயுள்ள தற்பர வடிவத்தில் ஜீவன் பஞ்சேந்திரியங்களின் வழியாய்ச் செல்லாமல் சந்தி செய்தல்வேண்டும், அதாவது கூடுதல் வேண்டும். பரம ஆன்மாவோடு ஜீவ ஆன்மாவைச் சேர்க்கும் முறை எதுவோ அதற்குத் தத்துவமசி மஹாவாக்கியப் பொருள் என்று சொல்லப்படும். இப்படி நின்ற நிலைக்குப் பஞ்சாக்ஷரஜெபம் என்றும் சொல்லப்படும்.

ஓம் ந-ம-சி-வ-ய என்பது பஞ்சாக்ஷரமாம். ஓம் ஓங்காரமாகிய சிரசில், நகாரமாகிய கந்தேந்திரியமும், மகாரமாகிய ரசேந்திரியமும், சிகாரமாகிய நேத்திரேந்திரியமும், வகாரமாகிய தொக்கேந்திரியமும், யகாரமாகிய சப்தேந்திரியமும் இருக்கின்றன. ஆகையாலே ஓம் என்னும் பிரணவத்தை, ந-ம-சி-வ-ய என்னும் ஐந்து அக்ஷரங்களோடு சேர்த்து ஓம் நமசிவயவென்று சொல்லப்படும்.

அண்ட சராசரங்களிலுள்ள எல்லாவற்றையும் காணுகிற ஒரு பெரிய அழியாப் பொருள் மனிதன் சிரசிலுள்ள மத்தியபாகத்தில் ஒளி மயமாய் இருக்கிறது. அதிலிருந்து இரண்டு கதிர்கள் பிரிந்து, இடம் வலமாகச் சந்திர சூரியர்களென்னும் சீதள உஷ்ணங்கள் கீழும் மேலுமாக மாறி மாறி ஓடிக்கொண்டிருக்கிறதினால் ஜீவன் பஞ்சேந்திரியங்களின் தொழில்களை அறிகிறது. மேற்சொன்ன அழியாப் பொருள் சிரசின் மத்தியில் இருக்கிறதென்பதை நாம் நன்றாக அறியவேண்டுமானால் நம்முடைய இரண்டு கண்களின் மத்தியில் பார்த்தால் அணுவடிவமாய் ஒரு பொருள் தோன்றும். அந்தப் பொருள் ஒரே பொருளாய் மத்திய பாகத்

திலிருப்பதினாலே கண்கள் இரண்டும் அந்த மத்திய பாகத்தில் வெகுதிராகப் பிரிந்திருக்கிறதினால் இரண்டு கண்களின் மூலமாய் அழியாப் பொருள் இருக்கிறதைப் பார்க்கிறோம். அந்த அழியாப் பொருளைச் சுற்றிலும் ஐந்து வர்ணங்களோடு கூடிய பஞ்சேந்திரியங்களின் வழியாய்த் தொழில்களை நடத்தும் பஞ்ச சூக்ஷமப் பொருள்கள் இருக்கின்றன. அது எப்படி யென்றால் கண்களைச் சுற்றி யிருக்கின்ற சிவப்புவர்ணம்இருக்கிற நகாரமாகிய இடத்தில் சூக்ஷம மண் பூதம் கந்தேந்திரியத்தையும், வெண்மை வர்ணத்தோடு கூடியிருக்கிற இடத்தில் மகாரமாகிய சூக்ஷம ஜலபூதம் ரசேந்திரியத்தையும், கருநீலத்தோடு கூடியிருக்கிற இடத்தில் சிகாரமாகிய சூக்ஷம தீ பூதம் நேத்திரேந்திரியத்தையும், கருமை வர்ணத்தோடு கூடியிருக்கிற இடத்தில் வகாரமாகிய சூக்ஷம வாயுபூதம் தொக்கேந்திரியத்தையும், ஸ்படிக வர்ணத்தோடு கூடியிருக்கிற இடத்தில் யகாரமாகிய சூக்ஷம ஆகாச பூதம் காதேந்திரியத்தையும் அறியச் செய்கிறது. இவ்வர்ணங்களின் மத்திய பாகத்தில் அணுமயமாய் ஒரு சித்பொருள் அதாவது அழியாப்பொரு ளிருக்கிறது. ஆனால் அந்த அழியாப் பொருள் இரண்டு கண்களின் உள்பாகத்தின் மத்தியில் ஒட்டிக்கொண்டிருக்கவில்லை. அது சிரசின் மத்திய பாகத்தில் அந்தர வெளியில் தனியாக அசைந்துகொண்டிருக்கிறது. அதுதான் பஞ்ச இந்திரியங்களுக்குச் சக்தியைக் கொடுத்து ஜீவன் வழியாய்த் தொழில்களை நடத்தி அண்ட சராசரத்தையும் பார்க்கிறது. அந்த அழியாப்பொருள் சூரியனையும் பார்ப்பதினாலே சூரியனுக்கு மேலாயுள்ள பெருஞ்சோதியென்று பெயராயிற்று. உலகத்தில் எவ்வளவு பெரிய ஒளியையும் இந்த அழியாப்

பொருள் கண்ணுக்குள் அணுமயமாயிருந்து பார்ப்பதினால் அதற்குப் பெருஞ்சோதி யென்று பெயர்.

சூரியனிடத்திலிருந்து உண்டாகும் ஒளியினால் உலகத்திலுள்ள பொருள்கள் பிரகாசிக்கின்றன. இதைப் போலவே மனிதன் சிரசின் மத்தியிலிருக்கும் ஆன்மப் பிரகாசத்தின் ஒளியைப் பஞ்சேந்திரியங்கள் அடைந்து உலக விஷயங்களின் தொழிலைச் செய்கின்றன.

இதனால் இப்பெரிய உலகம், கண்ணின் மூலமாய் நாம் பார்க்கும் சிரசின் மத்தியிலிருக்கிற அணுவில் அடங்கியிருக்கிறது. ஆகையாலே மனிதனுடைய உடல் தேவாலயமென்று சொல்லவேண்டும்.

> " உள்ளம் பெருங்கோயி லூனுடம் பாலயம்
> வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசற்
> றெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
> கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே."

என்று திருமூலர் தம் திருமந்திரத்தில் சிவபூசையென்னும் அத்தியாயத்தில் கூறியுள்ளதைக் காண்க.

நாம் நம் மனதை உலக நாமரூபங்களில் நிறுத்தாமல், அகண்ட சித்சொரூப வெளியில் நிறுத்தும்போது, பஞ்சேந்திரியங்களுக்குப் பலத்தைக் கொடுக்கின்ற பஞ்ச சூக்ஷ்ம இந்திரியங்கள், சிரசின் மத்தியிலிருக்கும் அணுவடிவத்தில் ஜீவனோடு சேர்ந்து கலந்துவிடும். அதனால் ஸ்தூல தேகத்தில் யாதொரு உணர்வும் இராது. சூக்ஷ்ம பஞ்சேந்திரியங்களாகிய யந்திரத்தில் ஜீவன் கூடி, சிரசின் மத்தியிலிருக்கும் அணுவடிவத்தில் சேர்ந்து நிற்கிறபோது, இந்த அண்டத்தையும் தனது ஸ்தூல தேகத்தையும் மறந்து ஜீவன் நிற்கும்.

ம

சிற்சொரூபம்



இடது கண் வலது கண்

அ உ

மேற்குறித்த முக்கோண வடிவத்தில் அகரம், உகரம், மகரம் என மூன்று அக்ஷரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. இந்த மூன்று அக்ஷரங்களும் பிரியாமல் ஒன்றுக்கொன்று தாங்கிக்கொண்டிருக்கின்றன. மகாரமாகிய சித் சொரூபத்திலிருந்து காற்றாகிய மூச்சானது பிறந்து இரண்டு கண்களில் தாக்கி, அங்கிருந்து மூக்கின் வழியாய் வருகிறது. ஆனால் இந்த மூச்சானது, மேற்சொன்ன மகாரமாகிய சிற்சொரூபம் அசைகிறதினால் வெளியிலிருக்கும் காற்று அசைந்து கண்ணில் தாக்கி மூக்கின் வழியாய் வருகிறதே தவிர அங்கேயே காற்று அடங்கியிருக்கவில்லை. அப்படியிருப்பதினாலேதான் நமது மூச்சானது வருவதும் போவதுமாகிய தொழிலைச் செய்கிறது.

மகாரமாகிய சித் சொரூபம் அசைந்து கொண்டிருக்கிறதினால், அந்த அசைவினால் காற்று அசைந்து இடது கண்ணில் தாக்கி இடது மூக்கின் வழியாய் வருகிற மூச்சை இடகலையென்றும், வலது கண்ணில் தாக்கி வலது மூக்கில் வருகிற மூச்சைப் பிங்கலையென்றும், இரண்டு கண்களில்

தாக்கி இரண்டு மூக்கின் வழியாய் வராமல் மூச்சு அசை கின்ற இடமாகிய அண்டவெளியென்னும் சித் சொரூபத்தி லேயே அடங்கி நிற்பது சுழிமுனையென்றும் சொல்லப்படும்.

ஆகையினால் மூச்சை இழுப்பது பிராணயாமமன்று. மூச்சைச் சுழிமுனையில் நிறுத்துவது பிராணயாமமென்று பெயர். பிராண + யாமம் = பிராணயாமம். பிராணனை, அதாவது மூச்சை நிறுத்துவதாம்.

மனிதன் பிராணயாமம் செய்யவேண்டுமானால் மனதை அண்டப் பெருவெளியில் நடனம் செய்கிற சிற்சொரூபம் இருக்கும் இடத்தில் நிறுத்திப் பிரபஞ்சத்தின் நாமரூபங்கள் அற்று அகண்டப் பெருவெளியாய் நின்றால் மூச்சானது கொஞ்சங் கொஞ்சமாய் அடங்கிக்கொண்டே வரும்.

ரிஷிகள், சித்தர்கள் ஆகிய இவர்கள் மூச்சை அடக்க வேண்டுமென்று நினைக்கிறதில்லை. மேற்சொன்ன அண்ட வெளியில் பிரகாசிக்கின்ற சித் சொரூபத்தில் அவர்களின் மனதை நிறுத்துகிறபோது அந்த சித் சொரூபத்திலிருந்து மூச்சானது வருவதினால் அந்த மூச்சு சிற்சொரூபமிருக்கு மிடத்திலேயே சூழ்ந்து நிற்கிறது. ரிஷிகள் சித்தர்கள் ஆகிய இவர்கள் மூச்சை நிறுத்தும் பழக்கத்தை எப்பொழுதும் அப்பியசிக்கிறதில்லை. ஏனென்றால் தானாய்த் தன்மயமாயிருக்கிற சிற்சொரூபத்தில் மனதை நிறுத்துகிறபோது மூச்சானது தனக்குத் தானாகவே அங்கேயே தயங்கி நிற்கும். மனிதன் தனது மனதைச் சிற்சொரூபத்தில் நிறுத்துகிறபோது மூச்சைக் கவனிக்கிறதில்லை. மேற்சொன்ன அப்பியாசத்தினால் மூச்சானது தனக்குத் தானாகவே அண்டப் பெருவெளியில் தயங்கி நிற்க ஆரம்பிக்கும்.



மனிதன் தனது மனதை உலகத்தின் வாழ்க்கையில் நிறுத்தி அந்த மயத்திலேயே அழுந்தியிருக்கிறதினால் மூச்சானது கீழ்முகமாகப் போய்க்கொண்டிருக்கிறது. அதாவது மேற்குறித்தவடிவத்தில்காட்டியிருக்கும் நகாரத்தின் வழியாகப் பாய்ந்து கீழ்முகமாக இறங்கி மூக்கின் வழியாய் மூச்சானது போகிறது. மனதை, நாமரூபமாகிய மாயையிலிருந்து நீக்கிச் சுத்தபரிபூரண அகண்ட சொரூபமாயுள்ள சின்மயத்தில் நிறுத்தி எங்கும் ஒரே மயமாய் அகண்ட வெளியாய்த் தானாய்த் தன்மயமாய் நின்றால் மூச்சானது நகாரத்தின் வழியாய்க் கீழ் முகமாய்ப் போகாமல் மகாரமென்னும் வழியாய் மேல் பாகமாய்ப் போய்க்கொண்டிருக்கும். அப்பொழுது சுவாசம் மூக்கின் வழியாய்க் கீழ்முகமாய் வராமல் மகாரத்தின் வழியாய் மேல் முகமாய்க் கொஞ்சம் கொஞ்சமாய்ப் போக ஆரம்பிக்கும். மேற்குறித்த வடிவத்தில் வட்டமாயிருக்கிற அடையாளம் இந்த அண்டத்தைக் குறிக்கும். அந்த வட்டத்தின் மேல்பாகத்தில் மகாரத்தின் எழுத்தோடு சேர்ந்திருக்கிற துவாரமானது பரம ஆன்மாவின் வடிவத்தைக் குறிக்கும். கீழ்ப்பாகத்தில் நகார எழுத்தோடு சேர்ந்திருக்கிற துவாரமானது நாமரூபப் பிரபஞ்ச மாயையைக் குறிக்கும்.

மேற்குறித்த வட்டவடிவ அண்டத்தில் பஞ்சபூதங்கள் பிரகாசித்துக்கொண் டிருக்கின்றன. அந்த வட்டவடிவத்தில் பிரகாசித்துக்கொண் டிருக்கிற பஞ்சபூதங்களுக்கு மேலாயிருக்கிற சிற்சொரூபம் மகார மென்னும் சுழிமுனைத் துவாரத்தில் மேல்முகமாய் இருக்கிறது. சிற்சொரூபத்திற்குக் கீழ்ப்பாகத்தில் நாமரூபப் பிரபஞ்சமாகிய மாயை யிருக்கிறது.

மனம் நாம ரூபமாகிய உலகமாயையில் கலந்து நிற்கிற போது அந்த மனதிற்குக் கீழ் உலகமென்றும், அப்படிக் கலக்காமல் சித்சொரூபத்தில் சேர்ந்து நிற்கிறபோது மேல் உலகமென்றும் சொல்லப்படும். மாயைக்கும் சித்சொரூபத்திற்கும் மத்தியில் அண்ட வெளியிருக்கிறது. அந்த அண்ட வெளியில் பஞ்சபூதங்களும் தயங்கிக்கொண் டிருக்கின்றன. ஜீவன் மாயையென்னும் கீழ்ப்பாகத்திலிருந்து பஞ்சபூதங்களாகிய இடைவெளியில் கொஞ்சங் கொஞ்சமாய் மிதந்துகொண்டு மேலாகிய சித்சொரூபம் இருக்குமிடத்திற்குப் போய்ச்சேர முயலவேண்டும். அப்படிச் சேருகிற ஜீவன் தனது மூச்சை மூக்கின் வழியாய் ஓடவிடாமல் மேல் பாகமாகிய சுழிமுனைத் துவாரத்தின் வழியாய்ப் போகும்படி செய்வான்.

ரசாயன வித்தையில் சில உப்புகளைச் சேர்த்து ஒரு பாத்திரத்திலிட்டுத் தீயை மூட்டுகிறபோது, இந்த உப்பு வகைகள் தீயின்பலத்தினால் உருகுகின்றன. அப்படி இந்த உப்புகள் உருகுகிறபோது அதிலிருந்து புகை உண்டாகிறது. அப்படி உண்டாகிற புகை அண்டவெளியில் பாவுகின்றது. அப்படிப் பாவவிடாமல் வாலை யென்னும் ஒரு விஞ்ஞானக் கருவியை அந்தப் பாத்திரத்தின் வாயில் அமைத்தால்,

அண்ட வெளியில் மேற்சொன்ன புகையானது பரவாமல் அந்த வாலையின் வழியாய்ப்போய் ஜலரூபமென்னும் திராவகமாக மாறி நிற்கிறது. அந்த ஜலரூபமாகிய திராவகத்தில் உப்புகளின் சாரங்கள் அடங்கியிருக்கின்றன. பாத்திரத்திவிட்ட ஸ்தூலரூபமாகிய உப்பு வகைகள் சத்து இல்லாமல் சிட்டமாக நின்று விடுகின்றன.

இதைப்போலவே உலகமாயையில் கலந்த எண்ணங்களாகிய உப்புவகைகள் மாயையினால் எரியும்போது அவைகளிலிருந்து புகைபோன்ற மூச்சானது அண்டத்தில் பரவி அணுக்களாக மாறுகிறது. அப்படிப் போகவிடாமல், அகண்டமாய் ஒரே தன்மையாய்ப் பரவியுள்ள சித்வெளியென்னும் வாலையைத் தேகமென்னும் பாத்திரத்தில் அமைத்து, அண்டவெளி யென்னும் வாலையின் வழியாய்ப் புகையென்னும் மூச்சைப் போகும்படிசெய்து, ஆனந்தமென்னும் அமிர்தரூபமாகிய திராவகப் பொருளாக மாறும்படி செய்யவேண்டும்.

அருள்வெளியில் சுடர் அடங்கியிருக்கிறது. ஆனால் அந்தச் சுடர் அண்டவெளியிலுள்ள அணுக்களோடு கலந்திருக்கிறதினால் அதை லேசாகப் பார்க்க நம்மால் முடிகிறதில்லை. இரண்டு வஸ்துக்களை அதாவது இரண்டு கற்களை அதிக பலமாய்த்தேய்த்துத் தொட்டுப்பார்த்தால் அந்தஇடத்தில் சுடுகிறது; அல்லது இரண்டு கற்களை வேகமாய்த் தட்டினால் அவைகளின் மத்தியில் ஒரு நெருப்புப்பொறி உண்டாகிறது. அண்டவெளியில் அணுக்களோடு கலந்திருக்கிற சுடரைக் கற்களின் மூலமாய் வேகமாய்த் தடுத்து வெளிப்படுத்துகிறதினால் நெருப்புப் பொறி உண்டாகிறது. அண்டவெளியில் சுடர் அடங்கியிருக்காவிட்டால் எப்படிக்கற்

களின் வேகத்தினால் நெருப்புப்பொறி உண்டாகும்? அருள் வெளியில் சுடரானது அடங்கியிருக்கிறதினால் அவைகளின் மத்தியில் நெருப்புப்பொறி உண்டாகிறதற்குக் காரணமாயிருக்கிறதென்று அறியவும். ஒரு நெருப்புப்பொறியை உண்டாக்க இரண்டு கற்கள் தேவையாயிருக்கின்றன. இதைப் போலவே மனம் 1, அண்டவெளி 1, ஆக இரண்டு வஸ்துக்கள் தேவையாயிருக்கின்றன. மனதையும் அண்டவெளியையும் ஒன்றாகச்சேர்த்து உரைக்கும்போது அந்த இரண்டின் உரைவினால் சித் சொரூபமாகிய ஜோதி யென்னும் சுடரானது வெளிப்பட்டுத் தோன்றும்.

அண்டவெளியில் பரவியிருக்கிற அணுக்கள் கூடிநின்ற பொருளைக் கல்லென்று சொல்லுகிறோம். இப்படி அமைந்துள்ள பொருள்களாகிய கற்களில் சுடர் அடங்கியிருக்கிறது. அருள் வெளியில் சுடர் இருக்கிறதினால் அந்த அருள் வெளியிலிருக்கும் அணுக்கள் அச் சுடரைப் பெற்றிருக்கின்றன. அப்படிப் பெற்றிருக்கின்ற அணுக்கள் கூடிக் கற்களாயின. அருள் வெளியிலும் கற்களிலும் ஒரே சுடர் அடங்கியிருக்கிறது. அருள்வெளியிலிருக்கிற சுடர் அழியாமலும், அணுக்களால் உண்டான கற்களில் உண்டாகிற சுடர் அழிவதுமாயிருக்கின்றன. அருள்வெளி அணுக்களைத் திரட்டிக் கற்களாக உண்டுபண்ணினதால் கற்கள் முடிவில் அழிகின்றன. உண்டாக்குகிற பொருள் எப்பொழுதும் அழியாமலும், உண்டாக்கப்படுகிற பொருள் எப்பொழுதும் அழிவதுமாகிய தன்மையைப் பெற்றிருக்கின்றன. இதைப்போலவே அருள் வெளியிலிருந்து ஜீவனோடு கூடிய இத்தேகம் உண்டாகிறது. அருள் வெளி எப்பொழுதும் மாறாமலும், ஜீவனோடு கூடிய தேகம் மாறுவதுமாயிருக்கிறது. ஆகையினால் காயம் அநித்தியமென்று பெரியோர்களால் சொல்லப்படுகிறது.

எப்படி இரண்டு கற்களை உரையும்படிசெய்து நெருப்புப்பொறியை உண்டாக்குகிறோமோ அப்படியே நாதபிந்துக்களை உரையும்படிசெய்து தேகத்தில் சுடரை அமையும்படி செய்கிறோம். ஆனால் அந்தச் செய்கை விளக்கீடாய் அமையும். அது எப்படியென்றால் கைகளினால் கற்களைப் பிடித்துத் தட்டுகிறபோது கையின் அசைவிற்குத் தக்கபடி கற்கள் உரைந்து பொறி உண்டாகிறது போலவேயாம். இதைக்குறித்துத் திருமூலர் தம் திருமந்திரத்திலும் முதல் அத்தியாயத்தில் உபதேச தந்திரத்தில்,

"விண்ணின்றிழிந்து விளக்கீடாய் மெய் கொண்டு"

என்று கூறியுள்ளார்.

ஆகையாலே ஒவ்வொருவரும் உலகவாழ்க்கையில் மிகவும் அழுந்தாமல் நற்செய்கைகளைச் செய்து வரவேண்டும். எப்பொழுதும் ஆன்மப் பிரகாசத்தைப் பெறுவதற்கு எவ்வளவு முயற்சி உண்டோ அவ்வளவு முயற்சிகளையும் ஒவ்வொருவரும் பெறுவதற்கு முயலவேண்டும். அதனால் பிறப்பு இறப்பு என்னும் தொழில்கள் ஜீவனுக்கு இல்லாமல் போய்விடும். ஜீவன் தனது ஜீவத்துவத்தை மாற்றிப் பெரிய தனிவல்லபத்தோடு கலந்து தானாய்த் தன்மயமாய் ஆகிவிடும்.

ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்